ங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 17 வெள்ளிக்கிழமை (01.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :217

## போராளிகளுக்குப் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்த

# அரசுக்கு புலிகள் 2 வார காலக்கெடு!

## நோர்வே, கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் நேரில் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை1

சுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதி தமது போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து தருவதற்கு அரசுக்கு புலிகள் இரண்டு காலக்கெடு விதித்துள்ளனர்.

தற்குள், அதைச் செய்துதர அரசுத்தரப்பும் படைகள் தரப்பும் ...ானால் அப்பகுதிகளில் தமது போராளிகளின் போக்கு துக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாங்களே செய்துகொள் ள் எனப் புலிகள் அறிவித்துள்ளனர்.



னப் புலிகளின் அரசியல்துறைப் ளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று ச்சியில் வைத்து, இலங்கை இனப் யில் அனுசரணைப் பணிவகிக் ர்வேத் தரப்பிடமும் யுத்தநிறுத் காணிப்புக் குழுத் தலைவரிட வட்டமாகத் தெரிவித்துவிட்

போராளிகளின் போக்குவரத் தொடர்ந்து நெருக்கடி ஏற்பட்டு னணியின், அவசர சந்திப்பு வருமாறு நோர்வேத் தரப்புக் காணிப்புக் குழுவுக்கும் விடு கள் அழைப்பு ஒன்றை விடுத் எனத் தெரிகின்றது.

த்து நோர்வேயின் பதில் வார் லெக்கிரிட், யுத்தநிறுத்தக்

ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் யார்? சு.கவுக்குள் ஒரே குத்துவெட்டு!

கொழும்பு,ஜூலை1

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமது கட்சியின் வேட்பாளர் யார் என்ற விவகாரத்தினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் குத்துவெட்டு ஏற்பட ஆரம்பித்திருப்பதாக அந்தக் கட்சியின் உள்ளக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தப்பட வேண்டுமென எம்பிலிப்பிட்டிய மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தனர்.

இதனையடுத்து, இதுதொடர்பில் அமைச

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சீற்றத்தின் பின்னணி!

கிழக்கில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை தந்திரோபாயமாக முடக்கி அவர்களின் செல்வாக்கை அங்கு முறியடிப்பதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு முடுக்கி விட்டிருக்கும் நடவடிக்கைகளால கடுஞ்சீற்றமும் எரிச்சலும அடைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் தலைமை கிழக்கு நிலைமை குறித்து 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' ஒருமுடிவெடுக்கத் தீர்மானித்துவிட்டதாக அறியவருகின்றது.

அது தொடர்பான நடவடிக்கைகளின் ஓர் அங்கமே கிழக்கில் தமது போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசுக்கு புலிகள் திட்டவட்டமாகக் காலக்கெடு விதித்திருக்கும் விவகாரமாகும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தோல்விகண்டு முடங்கிப் போன கருணா குழுவை 'உயிர்ப்பித்து' அதன் பெயரில் புலிகளுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு இராணுவப் புலனாய்வுப பிரிவும் அதனுடன் சேர்ந்தியங்கும் கூலிப்படைகளும் திட்டமிட்டுள்ளன என்றும்-

அதற்காகப் பாரிய வியூகங்களை வகுதது அவை செயற்படுகின்றன என்றும்-

சமாதான காலத்தை - யுத்தநிறுத்தத்தை - இவ்வாறு பயன்படுத்தி கிழக்கில் புலிகளின் முதுகெலும்பை முறித்து விட இராணுவத்தரப்பு கனகச்சிதமாக ஏற்பாடுகளை செய்துள்ளது என்றும்-

புலிகளின் வட்டாரங்கள் எரிச்சலோடு கூறுகின்றன.

கிழக்கில் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ...ணுவப் புலனாய்வுத் துறையினர் மூவர் ...க்களப்பில் நேற்றுச் சுட்டுக்கொலை!

...ா வில் சென்றோரை வழிமறித்து துப்பாக்கிச்சூடு!!



தாக்குதலுக்கு இலக்கான ஓட்டோ

கொழும்பு,ஜூலை1

ஓட்டோ ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வழிமறித்து சுட்டுக் கொல்லப்பட்டனர். நேற்றுக் காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து வலையிறவு பகுதி நோக்கி ஓட்டோ ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சார்ஜனட் சரத் குலரத்ன, கோப்

(14ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சிக்கு நேற்று விஜயஞ்செய்த நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகளின சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

## ...ாதுக்கட்டமைப்பை இலங்கை ...ரைந்து செயற்படுத்த வேண்டும்

### ஆஸ்திரேலிய அரசு வலியுறுத்து

கொழும்பு,ஜூலை1

...ப்பேரலை மீளமைப்புப் பணிகளுக் ...பொதுக்கட்டமைப்பை விரைந்து ...படுத்தவேண்டும் என்று ஆஸ்திரே... அரசு வலியுறுத்தியுள்ளது.

...க்கச்சாத்திடப்பட்ட பொதுககட்டமைப்பு ...த ஆஸ்திரேலிய வெளிவிவகார ...மைச்சர் அலெக்சாண்டர் டௌனர் கூறியது:-

தமிழீழ விடுதலைப் புலிகளும், ஸ்ரீலங்கா அரசும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ளதை வரவேற்கிறோம். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க இப்போது பொதுக்கட்டமைப்பு உதவியாக இருக்கும்.

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நம்பிக்கையை வளர்த்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிரான மூன்று வழக்குகளும் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை1

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வார முற்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களும நேற்று நீதிபதி கே.எச். சுமித்ரபால முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபின் அந்த வழக்குகள் ஜூலை 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அந்தத்தினத்தில் நீதிமன்றில் ஆஜராகுமாறு எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜே.வி.பி. சார்பில் அதன் மேல்மாகாண சபை உறுப்பினர் வாஸ்குணவர்த்தன, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் சார்பில் வண.எல்லே குணவன்ஸ தேரர், தேசிய பிக்குகள் முன்னணி சார்பில் வண.தம்பர அமிலதேரர் ஆகியோர் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தாக்கல் செய்த மனுக்களே நேற்று நீதிமன்றத்தில் ஒன்றாக எடுக்கப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி நிமல் வீரக்கொடி ஆஜரானார்.

எதிர்மனுதாரர்களில் ஒருவரான புனர்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தீவக பண்ணிசைப் பாடசாலை ஊர்காவற்றுறையில் அமையும்

யாழ்ப்பாணம்,ஜூலை1

தீவுப்பகுதிக்கான பண்ணிசைப் பாடசாலை நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் ஆலயத்தில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் பண்ணிசைப் பாடசாலையின் ஆரம்ப வைபவம் இடம்பெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்தநிகழ்வில் கலந்துகொண்டு அருளாசியுரை வழங்குவார்.

இந்து சமய கலாசார் அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுபண்ணிசைப் பாடசாலையை ஆரம்பித்து வைப்பார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை இந்த பண்ணிசைப் பாடசாலையை நிர்வகிக்கவுள்ளது என உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.(எ)

# கசையடித் தண்டனை நேற்றுடன் நீக்கம்

கடந்த 21 வருடங்களாக நடைமுறையில் இல்லாமல் - அதேசமயம் சட்டப் புத்தகத்தில் இருந்துவந்த - கசையடித் தண்டனைமுறை நேற்றுடன் சட்டப்புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

இலங்கை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் தண்டனைகளில் கசையடித் தண்டனையும் உள்ளது. நீதிமன்றில் இறுதியாக கசையடித் தண்டனை விதிக்கப்பட்டது 1984ஆம் ஆண்டிலாகும். அதன் பின்னர் இதுவரையிலும் யாருக்கும் கசையடித் தண்டனை வழங்கப்படவில்லை. கசையடித் தண்டனை விதிக்கப்படுவது நவநாகரிக உலகுக்குப் பொருத்தமற்றது என்று கருதி நாகரிகமடைந்த நாடுகள் பலவற்றில் அந்த முறைமை நீக்கப்பட்டுவிட்டது. இலங்கையில் சட்டப்புத்தகத்தில் இருந்துவந்த இந்தத் தண்டனை தொடர்பான சரத்தை நீக்குவதற்கு நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன நேற்று நடவடிக்கை எடுத்தார். (எ-க)

## போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற ஊழியருக்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களில் இதுவரை பணிக்கொடை பெறாத ஊழியர்களை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் சாலை முன்பாக சமுகம் தருமாறு பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பில் கோரப்பட்டுள்ளது. (ஒ-20)

# அரசுக்கு புலிகள் 2 வார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் நோர்வேத் தூதரகத்தின் மூன்று அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு நேற்றுக்காலை 10.40 மணி முதல் 12.15 மணிவரை கிளிநொச்சியில் புலிகளின் சமாதான செயலகத்தில் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினரைச் சந்தித்தது.

தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பார் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியின் விவரம் வருமாறு:-

☒ *கேள்வி:-* இன்றைய சந்திப்புக் குறித்து....?

⦸ *பதில்:-* இன்று முக்கியமான சந்திப்பு இடம்பெற்றது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரையும், அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வே பதில் தூதுவரையும் சந்தித்தோம்.

எமது போராளிகள், பொறுப்பாளர்களுக்குப் பாதுகாப்பான பயண ஒழுங்கு எனக் கூறி, உத்தரவாதம் அளித்து, அவர்களை ஒரு சதிவலைக்குள் சிக்கவைத்து, அவர்களைக் கொல்லுவதற்கு வெலிகந்தையில் அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சி சம்பந்தமாகத்தான் முக்கியமாக இன்று தெரிவித்தோம்.

இது தொடர்பாக எமது தலைமைப் பீடத்தின் இறுக்கமான நிலைப்பாட்டையும், அதிருப்தியையும் தெரிவித்திருக்கின்றோம்.

இப்படியான நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் தொடர்ந்து போர்நிறுத்த சூழலைத் தக்கவைப்பதோ, போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைய நாங்கள் நடந்து கொள்வதோ சாத்தியமில்லாத ஒன்றாக மாறும் என்பதைத் தெரியப்படுத்தினோம்.

சில முக்கியமான நிலைப்பாடுகளை எமது தலைமைப்பீடம் எடுத்துள்ளது என்பதை - இறுக்கமான, உறுதியான, நிலைப்பாட்டை நாம் கைக்கொள்ளப்போகின்றோம் என்பதை - தெளிவுபடுத்தினோம்.

அண்மையில் போராளிகள், பொறுப்பாளர்கள் போக்குவரத்துச் செய்கின்ற போது இடையிலே இராணுவப் புலனாய்வாளர் குழுவும், ஆயுதக்குழுக்களும் இணைந்து அவர்கள்மீது ஒரு கொலைவெறித் தாக்குதலை நடத்தப்போகின்றன என்று எமக்குத் தெரியவந்தது. ஏற்கனவே, எமது புலனாய்வு அமைப்புமூலம் கிடைக்கப்பட்டதே இத்தகவல். இந்தத் தகவலை முன்னோடியாகக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரிவித்தோம். இப்படியான தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனறு நாம் தெரிவித்ததன் அடிப்படையில்தான் அப்போராளிகளின் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது. பின்னர் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியான வகையில் உறுதிப்படுத்தப்பட்டு, கண்காணிப்புக்குழு, படைத்தரப்பு மற்றும் அரசின் முழு உத்தரவாதத்துடன் போக்குவரத்து எமது போராளிகளையும் பொறுப்பாளர்களையும் நாம் அந்தப் பயணத்துக்கு அனுமதித்தோம்.

இருந்தும் பலதடவைகள் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டு, எச்சரிக்கப்பட்ட நிலையிலும் எமது போராளிகள் பயணம் செய்த போது இடையில் தாக்கப்பட்டுள்ளனர். இது மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்துகின்ற தாக்குதலாக அமைந்திருக்கின்றது.

அந்த வகையில், இந்த விவகாரத்தின் ஆழத்தை விளக்கியுள்ளோம். இப்போது இருவாரகால அவகாசம் கொடுத்திருக்கிறோம்.

## போக்குவரத்து பாதிப்புற்றால்...!

எமது போராளிகளுக்கு இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி, தாயகப் பிரதேசத்தில் எந்தவித ஆபத்தும் இன்றிச் சுதந்திரமாக நடமாடும் உரிமை இருக்கின்றது. அவர்களது பாதுகாப்புக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உத்தரவாதம் அளிக்கவேண்டியவர்கள் படைத்தரப்பினரே. ஆகவே, அந்தவகையில் - யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இரண்டு தரப்புகளில் ஒன்று என்ற வகையில் - அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் படைத்தரப்பும், அரசும் அதை உத்தரவாதம் செய்யவேண்டும்.

எங்கள் போராளிகள் போக்குவரத்துச் செய்கின்றபோது கண்காணிப்புக் குழுவும், இராணுவமும் அங்கு பிரசன்னமாக இருக்கவேண்டும். எந்தவித உயிராபத்தும் ஏற்படாத உத்தரவாதம் தரவேண்டும். மாதாந்தம் இரு தடவைகள் பயண ஒழுங்கை உறுதிசெய்யுமாறு கேட்டிருக்கின்றோம்.

இன்றுள்ள நெருக்கடித் தன்மையை விளக்கியுள்ளோம்

போராளிகள், பொறுப்பாளர் போக்குவரத்துச் செய்து, எங்களுடன் அவர்கள் தகவல்களையும் பரிமாற்றம் செய்துகொள்ளாவிடின் நாங்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பேணுவது கஷ்டமானதாக இருக்கும்.

## தொடர்ந்தும் பொறுமை பேண முடியாது

படைத்தரப்போ, அரசோ இந்த உடன்பாட்டின்படி ஒழுக மறுக்குமாக இருந்தால் - எங்களது போக்குவரத்துக்களை முடக்குமாக இருந்தால் -அதற்கான ஒழுங்கமைப்பைச் செய்ய மறுக்குமாக இருந்தால் - எங்களது போராளிகளோ, பொறுப்பாளர்களோ வழமைபோல் - அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு முன்னர் - எப்படி நாளாந்தம் தமது போக்குவரத்தை சகல வழிமுறைக்கூடாக முன்னெடுத்தார்களோ அந்த நடைமுறைக்குள் - அவர்கள் மீள இறங்குவதைத்தவிர வேறு மாற்றுவழி இல்லை.

ஆகவே, இலங்கை அரசுக்கும் படைத்தரப்புக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணவேண்டும். அமைதிவழியில் தீர்வு காண வேண்டும் என்ற அர்ப்பணிப்பு இருக்குமாக இருந்தால் - அந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் முகமாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை நடைமுறைப்படுத்த உடனடியாக முன்வரவேண்டும்.

இவ்விடயத்தில் அவர்கள் இழுத்தடிப்புச் செய்து நிலைமையை மோசமாக்குவார்களேயானால், நாங்கள் தொடர்ந்தும் பொறுமைகாத்துக் கொண்டிருக்கமுடியாது. இருவாரங்கள்தான் கால அவகாசம் கொடுத்திருக்கின்றோம். எங்கள் போராளிகளின் பயண ஒழுங்குகளுக்கான உத்தரவாதப்படுத்தலைத் தரும்படி கேட்டுள்ளோம். அதற்கான சிபார்சுகளையும் செய்துள்ளோம.

இதுதான் இன்று முக்கியமாகப் பேசப்பட்ட விடயமாகும்.

## இராணுவ நகர்வுகளை முடக்கவேண்டி நேரும்

☒ *கேள்வி:-* போராளிகளின் போக்குவரத்து விடயம் மட்டுமா? அல்லது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் இந்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளதா?

⦸ *பதில்:-* உடனடியாகப் போராளிகளின் போக்குவரத்துத்தான் மிக முக்கியமானது. போராளிகள் கொல்லப்படுகின்றபோது, தளபதிகள் - பொறுப்பாளர்கள் கொல்லப்படுகின்றபொழுது, உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் சாத்தியமில்லாத நிலைமை உடனடியாக ஏற்படும்.

எமது போராளிகளின் போக்குவரத்து முடக்கப்படும்போது இராணுவத் தரப்பின் போக்குவரத்தையும் முடக்கவேண்டிய நிலைக்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்படுவோம. ஆகவே, உடனடியாகப் போர்நிறுத்த உடன்படிக்கை ஒரு சீர்குலைவுக்குட்படும். இந் நிலைமையை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதேபோன்று, போர்நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கான நடைமுறைகள் குறித்தும் இறுக்கமாக வலியுறுத்தியுள்ளோம்.

இவ்விடயத்துக்கு மிக விரைவில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு அரசும், படைத்தரப்பும் முயலவேண்டும்.

## பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துக!

இன்று மக்கள் ஒரு கொந்தளிப்பான நிலைக்கு உள்ளாகியிருக்கின்றனர். போராட்டங்கள், ஊர்வலங்கள் என்று நடத்தித் தங்களுக்கான தீர்வைத் தேடி முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலைமையை இன்றைய சந்திப்பின்போது சுட்டிக்காட்டியுள்ளோம்.

கண்காணிப்புக் குழுத் தலைவரையும், அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பையும் இன்று நாம் அழைத்ததன் நோக்கம் இன்றுள்ள பாரதூரமான தன்மையை நாங்கள் அவர்களுக்கு விளக்குவதற்காகத்தான். இந்த நிலைமை சீர்செய்யப்படாவிட்டால், எல்லாமே சீர்குலையும் என்பதுதான் இன்றுள்ள யதார்த்தம். இதை அவர்களுக்கு வெளிப்படுத்தியதோடு, பொதுக்கட்டமைப்பும் விரைவாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும் என வலியுறுத்தினோம்.

ஒப்பம் இடுவதோ, இணக்கப்பாட்டைத் தெரிவிப்பதோ, வாக்குறுதிகளைக் கொடுப்பதோ முக்கியமல்ல. அவற்றை எமது மக்கள் ஒருபோதும் நம்பப்போவதில்லை.

ஆகவே, பொதுக்கட்டமைப்பை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான சூழலை உருவாக்கவேண்டும்.

☒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்பில் இடம்பெறும் உங்கள் தரப்பு உறுப்பினர் விவரம் கையளிக்கப்பட்டுள்ளதா?

⦸ பதில்:- மிகவிரைவில் கையளிக்கவிருக்கின்றோம். இரண்டொரு தினங்களில நிதியத்தின் காப்பாளராகச் செயற்படப்போகும் உலக வங்கியோடு பேசவிருக்கின்றோம். அவர்களுடன் பேசியவுடன் எமது நிலைப்பாட்டை அனுசரணையாளர்களுக்கு தெரிவிப்போம்.

## நெருக்கடி தீர்ந்ததும் முஸ்லிம்களுடன் பேச்சு

☒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டதன் மூலம் சந்திரிகாவின் அரசை விடுதலைப்புலிகள் ஏற்றிருப்பதாக அமைச்சர் ஒருவர் கூறியுள்ளாரே! அதுபற்றி?

⦸ *பதில்:-* நிச்சயமாக அதில் உண்மை இருக்கிறது. ஸ்ரீலங்காவுக்கு என்று இருக்கின்ற அரசு இன்றுள்ள அரசு என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதனை நிராகரித்து விட முடியாது.

ஆனால், இரண்டு தேசங்கள் இருக்கின்றன. அதில் தமிழர்களின் தேசம் தமிழர்களின் பிரதிநிதிகள் யார் என்பதை அவர்கள் ஏற்றால் சரி. ஆனால் நாங்கள் ஸ்ரீலங்காவின் அரசு, இருதரப்பும் இருதேசங்களில் உள்ள அதிகார மையங்களை ஏற்றுக்கொண்டபடியால்தான் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டோம். இரண்டு அதிகார மையங்கள் இருப்பதை நாங்களும் ஏற்றுக்கொண்டுஅவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என நம்புகின்றோம் இதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்.

☒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக முஸ்லிம் தரப்புடன் பேசுவீர்களா?

⦸ *பதில்:-* இப்போது நிலைமைகள் யுத்தநிறுத்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. தளநிலைமைகளில் மிக மோசமான நெருக்கடியை அரசும் படைத்தரப்பும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே முதலில் இவற்றுக்குத் தீர்வு காணவேண்டிய இக்கட்டுநிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

எனவே, அப்படியான நிலைமைகளைப் பற்றி இன்று கண்காணிப்புக் குழுவுடனும் நோர்வேயுடனும் பேசியுள்ளோம் நிலைமை சுமுகமடைகின்றபோது - முக்கியமாக முஸ்லிம் சமூகத்துடன் - பேசுவோம்.

நிச்சயமாக, எங்கள்தாயகப் பிரதேசத்தில் எந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் முஸ்லிம் சமூகத்தையும் இணைத்துக் கொள்வதும் நாம் இணைந்து கொள்வதும், யதார்த்தமாகும். அந்தச்சூழலை எதிர்பார்த்திருக்கின்றோம். காலக்கிரமத்தில் அப்படியான முன்னெடுப்புகள். வேலைத்திட்டங்களை. நாம் முன்னெடுக்கும் போது முஸ்லிம் மக்கள் முழுஅளவில் அதில் பங்குபற்றுவர் அவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படக்கூடிய கலந்துரையாடல்களிலும் முயற்சிகளிலும் நிச்சயமாக நாம் ஈடுபடுவோம்.

☒ *கேள்வி:-* இராணுவத்தை தங்களுடன் இணைந்து செயற்படுமாறு ஜே.வி.பி. கேட்பது குறித்து....?

⦸ *பதில்:-* இதை ஜே.வி.பியிடம்தான் கேட்க வேண்டும். இராணுவம் என்ன முடிவு எடுக்கிறதோ அதில்தான் ஸ்ரீலங்காவில் ஏற்படப்போகின்ற அரசியல் மற்றும் ஏனைய மாற்றங்கள் எல்லாம் தங்கியுள்ளன.

## இருவார கால அவகாசம்

☒ *கேள்வி:-* நீங்கள் வழங்கும் இரண்டுவார அவகாசம் இன்றில் இருந்தா?

⦸ *பதில்:-* இன்றிலிருந்து இருவார அவகாசம் கொடுத்துள்ளோம். இருவார அவகாசத்துக்குள் எங்களுக்கு முடிவைத் தெரிவிக்கவேண்டும். அரசு யுத்தநிறுத்த உடன்பாட்டை பேணுவதற்கு தயாராக இருக்கிறதா? அல்லாவிடில் யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்த விரும்பவில்லை. தாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றதொரு நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றதா? என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளையும் கடந்த காலங்களில் தொடர்ச்சியாகப் பேணப்பட்ட நடைமுறைகளையும் உறுதிசெய்யுமாறுதான் நாம் கேட்டுள்ளோம்.

☒ *கேள்வி:-* எழுத்துமூலம் கேட்டுள்ளீர்களா?

⦸ *பதில்:-* வாய்மூலமாகவும் கேட்டுள்ளோம் எழுத்துமூலமாகவும் கேட்டிருக்கின்றோம் இதுசம்பந்தமாக அவர்கள் இரண்டு வாரத்துக்குள் பதில் தர வேண்டும் இல்லாவிட்டால் வழமைபோல எங்கள் போக்குவரத்து ஒழுங்கமைப்புகளை நாமே செய்வோம். அப்படிச் செய்யும்போது அதைப் படைத்தரப்பு இடைநிறுத்தி மறித்து நெருக்கடிகளைக் கொடுக்குமாக இருந்தால் அவர்களது போக்குவரத்தை முடக்கும் நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்படுவோம் இந்த நிலைமையத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

ஆகவே அரசும் படைத்தரப்பும்தான் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை பேணுவதா? இல்லையா?என்பதை இப்போது முடிவுசெய்யவேண்டும்.

☒ *கேள்வி:-* புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து விலகுவதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய இருவார அவகாசம்தான் இப்போது கொடுக்கப்பட்டுள்ளது எனக் கருதமுடியுமா?

⦸ பதில்:- அப்படி இதை நீங்கள் நினைககலாம் எங்களைப் பொறுத்தவரையில் இருவார காலத்துக்குள் நாங்கள் இதற்கான முடிவைக் கேட்டுள்ளோம் இல்லாவிடில் எமது இறுக்கமான நிலைப்பாட்டை இருவாரகாலத்திற்குப்பின் நாம் தெரிவிப்போம்.

எமது போராளிகள் முடங்கி இருக்க முடியாது அவர்கள் சுதந்திரமாக நடமாடவேண்டும். பொறுப்பாளர்கள் தளபதிகள் தலைமைப்பீடத்துடன் அடிக்கடி கலந்துரையாடவேண்டும் ஒழுங்குப்படுத்தலைச் செய்ய வேண்டும்.

இல்லாவிட்டால் நாங்கள் உடன்படிக்கை நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது கடினமாக இருக்கும்.

ஆகவே அவர்கள் சரியான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நாங்கள் சுயமாக எமது போக்குவரத்தை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாதது என்பதை எடுத்துக் கூறியுள்ளோம்.

இருவாரகாலம் முடிய அதுபற்றிய கேள்விகளை எழுப்புவது பொருத்தமானது - என்றார். (எ-க-3)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## யுத்தத்தை வருந்தி அழைப்போரே அதுபற்றிக் கூப்பாடும் போடுகின்றனர்

"புலிகள் யுத்தத்துக்குத் தயாராகின்றார்கள். எனவே, நாட்டின் முப்படைகளும் யுத்தத்துக்குத் தயாராகவேண்டும். அதற்கேற்ற ஏற்பாடுகளை முப்படைத் தளபதிகளும் செய்யவேண்டும்."

- இப்படி அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஆயுதப் போராட்டத்தில் முகிழ்ந்த இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு. அது போராட்டத்தில் - யுத்தத்தில் - முனைப்புக் காட்டாமல் இருந்தால்தான் வியப்பு.

ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான அஹிம்சை வழிப் போராட்டங்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் ஆயுதமுனையில் அடக்கப்பட்ட பின்னணியில்தான், 'முள்ளை முள்ளால் எடுக்கும்' வழிமுறை நோக்கத்தோடு புலிகள் இயக்கம் பிறந்தது; வளர்ந்தது; இன்றைய விஸ்வரூப நிலைக்குத் தன்னை ஸ்திரப்படுத்தியது.

ஒரு தேசத்துக்கான - தனது இனத்தின் தனித்துவமான தாயகத்துக்குரிய - பிரத்தியேகக் கட்டுமானங்களை ஸ்தாபித்து, ஒரு தனி அரசுக்கான அடிப்படை உருவகங்களைத் தோற்றுவித்த நிலைமையில்தான், அது யுத்த நிறுத்தத்துக்கு இணங்கி, சமாதான முயற்சிகளுக்கு - அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு - வாய்ப்பளித்து, விட்டுக்கொடுப்புடன் இப்போது கீழிறங்கி வந்து நிற்கிறது.

அந்த வாய்ப்பு - சந்தர்ப்பம் - உரியமுறையில் பயன்படுத்தப்படாவிட்டால் - இனப்பிணக்குக்கு இணக்கத் தீர்வுகாணும் முயற்சி சரிவரவில்லை என்றால் -

யுத்தம் மீண்டும் வெடிக்கும் என்ற துரதிஷ்ட நிலை தவிர்க்க முடியாமல் போவது யதார்த்தமாகும்.

அத்தகைய அபாய நிலைக்கு இலங்கைத் தீவை இட்டுச் செல்வோர்தான், இதனால் இத் தீவு சந்திக்கப்போகும் அனர்த்தங்களுக்கு - அழிவுகளுக்கு - இழப்புகளுக்கு - முதலில் பொறுப்புக் கூறவேண்டியவர்கள்.

அப்படிக் குழப்பத்திற்குப் பொறுப்பேற்கவேண்டிய தரப்பினரே, செய்வதை எல்லாம் செய்துவிட்டு, வெளியே வந்து நின்றுகொண்டு, புலிகள் யுத்தத்துக்குப் போகப் போகிறார்கள் என்று கூப்பாடு போடுவது, புலிகள் மீது குற்றம் சுமத்துவதும் வேடிக்கையன்றோ...!

தனிநாடு கேட்ட தமிழர்கள் அமைதி வழியில் தீர்வு காண்பதற்காக அதிலிருந்து இறங்கி விட்டுக்கொடுத்துச் செயற்பட இணங்கினார்கள்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்குத் தனிநாடு என்ற நிலைமையிலிருந்து தமிழர் விட்டுக்கொடுத்து இறங்குவதாயின் அப்படி இறங்கக் கூடிய அடுத்த கட்டம் எது?

வடக்கு - கிழக்கில், அதாவது தமிழர் தாயகத்தில் ஒரு சமஷ்டி அமைப்பு; தென்னிலங்கையில், அதாவது சிங்கள தேசத்திற்கு, ஒரு சமஷ்டி அமைப்பு; இரண்டும் சேர்ந்து உருவான சமஷ்டிக் கூட்டமைவு (Confederation) தேசம் என்பது தானே...!

அதைக் கூடப் புலிகள் வலியுறுத்தாமல் விட்டுக்கொடுத்து அதற்கு அடுத்தகட்டத்துக்கு இணங்கினார்கள். வடக்கு - கிழக்கையும் உள்ளடக்கி இலங்கையில் ஒரு மத்திய அரசு, அதன் கீழ் தமிழர் தாயகத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு சமஷ்டி அமைப்பு என்ற கட்டம் வரை இறங்கிப் புலிகள் சம்மதித்தனர். கறுப்பு - வெள்ளையில், ஆவணத்தில், அது பதிவும் செய்யப்பட்டது

அமைதி முயற்சிகளில் அதற்குப் பின்னர் என்ன நடந்தது? எதுவும் நடக்கவில்லையே!

தமிழர் தாயகத்தில் கணிசமான நிலப்பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து ஏறத்தாழ ஓர் அரசுக்குரிய அதிகார மற்றும் நிர்வாகக் கட்டுமானங்களைத் தனியாகத் தன்னகத்தே கொண்டிருக்கும் தமிழர் தரப்பு, தனிநாட்டுக் கோரிக்கையை விட்டு கீழிறங்கி, உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு இணக்கம் தெரிவித்த சூழ்நிலையில்தான் இடைக்கால ஏற்பாடு குறித்த விடயம் முக்கியத்துவம் பெற்றது.

இறுதித் தீர்வுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் ஒன்று தேவை என்பதைச் சிங்களத் தரப்பும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது.

தனிநாட்டுக்கான கட்டமைப்பு ஏற்பாடுகளை வைத்துக் கொண்டு சமஷ்டித் தீர்வுக்குத் தமிழர் தரப்பு இறங்கி வந்த நிலையில் இடைக்கால ஏற்பாடு என்பது அந்தத் தனிநாட்டுக்கும் சமஷ்டி தீர்வுக்கும் இடைப்பட்டதாகத்தானே இருக்கமுடியும்?

ஆனால், அந்தளவுக்கு விட்டுக்கொடுக்கத் தென்னிலங்கைச் சிங்களம் தயாராக இருக்கவில்லை. இப்போது வடக்கு-கிழக்கில் கணிசமான கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் புலிகளிடம் இழந்து விட்டு, ஏனைய பிரதேசத்தில் தான் வைத்திருக்கும் ஒற்றையாட்சி அரச நிர்வாக முறைக்கும் சமஷ்டி தீர்வுக்கும் இடையிலான ஒன்றே இடைக்கால நிர்வாகமாக அனுமதிக்கப்பட முடியும் என்று அது விடாப்பிடியாக நிற்கிறது.

போதாக்குறைக்கு ஜனாதிபதி சந்திரிகாவின்- தீர்க்கதரிசனமற்ற - அதிகாரப் பேரவா கொண்ட - பதவி ஆசை காரணமாக பௌத்த, சிங்கள மேலாண்மைவாத செல்வாக்குமிக்க சக்திகளின் கைகளுக்குள் தென்னிலங்கைச் சிங்கள அரசின் அதிகாரப்பிடி சிக்கி இறுக, நிலைமை இன்னும் மோசமானது.

இப்படி இடைக்காலத் தீர்வும் இல்லை,சமாதான முன் முயற்சிகளும் இல்லை, அமைதி வாய்ப்புகளும் இல்லை என்ற இரண்டும் கெட்டான் நிலையில் யுத்தநிறுத்தம் நின்று நிலைத்துத் தாக்குப்பிடிப்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றது.

யுத்தநிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு செயலுருவம் கொடுப்பதில் அரசுத் தரப்பு போடும் விடாப் பிடியான முட்டுக்கட்டை, மக்களின் வாழ்வாதார இடங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்து வைத்துக்கொண்டு, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர அனுமதிக்காமல் அடக்குமுறையைத் தொடர்வது போன்றவையும் யுத்தத்திற்கு வெற்றிலை வைக்கும் வேலைகள்தான்.

இவற்றையெல்லாம் செய்துகொண்டு, அமைதி முயற்சிகளை வருடக்கணக்கில் முடக்கிவைத்து, அரசியல் அந்தகாரத்தில் தமிழர் தரப்பைத் தவிக்க விட்டு விட்டு, 'யுத்தம் வரப் போகின்றது' என்று கூப்பாடு போடுவதில் அர்த்தம் இல்லை. இப்படி யுத்தத்துக்கு வழி செய்பவர்களே அதற்குப் பொறுப்பேற்கவேண்டும்.

# தனது மகள் இந்தியாவர விசாகோரி சிறையில் உள்ள நளினி மனுத்தாக்கல்!

சென்னை,ஜூன்1

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் நளினி இலங்கையில் தங்கியுள்ள தனது மகள் இந்தியா வருவதற்கு விசா வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

1991ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக சென்னையைச் சேர்ந்த நளினி உட்பட பலர் கைதாகினர். கைதானபோது நளினி கர்ப்பமாக இருந்தார். அவரது கணவர் இலங்கையைச் சேர்ந்தவர் அவரும் ராஜீவ் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டார். 1992 ஆம் ஆண்டு நளினிக்குப் பெண் குழந்தை பிறந்தது அக்குழந்தை இலங்கையில் நளினியின் மாமியார் வீட்டில் வளர்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

ராஜீவ் கொலை வழக்கில் நளினிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது கருணை மனு ஏற்கப்பட்டு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. நளினி வேலூர் சிறையில் இருக்கிறார். தற்போது அவரது மகளுக்கு 13 வயதாகின்றது. தனது மகளை இந்தியாவிற்கு அழைத்துவர விரும்புகிறார் என்றும் அதற்கு அனுமதி தரவேண்டும் என்றும் கோரி உயர் நீதிமன்றத்தில் நளினி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தனது மகளுக்கு விசா அனுமதி தரக்கோரி அளித்த விண்ணப்பத்திற்கு மத்திய அரசு பதிலளிக்கவில்லையென மனுவில் நளினி கூறியுள்ளார்.

இம்மனுவை நீதிபதி பி.டி.தினகரன் விசாரணைக்கு ஏற்றார். இம்மனு குறித்து 4 வாரங்களில் பதிலளிக்குமாறு வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார். (ஒ)

# மண்டைதீவில் காணாமற்போனோர் பற்றி மனித உரிமைகள் செயலகம் விசாரணை

யாழ்ப்பாணம்,ஜூலை1

மண்டைதீவுப் பகுதியில் 1990 ஆம் ஆண்டு ஆள்கள் காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மனிதஉரிமைகள் செயலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் நியமித்த விசாரணைக் குழு கடந்த ஜூன் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் மண்டைதீவுக்கு விஜயம் செய்து அந்த மக்கள் மத்தியில் விசாரணை நடத்தியுள்ளது.

1990 ஓகஸ்ட்டிலிருந்து செப்ரெம்பர் வரை மண்டைதீவு அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டோர் 62 பேர் இதுவரை காணாமல் போயிருந்தார்கள்.

வ.கி.ம.உ.செயலகம் இவர்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு விவரம் சேகரிக்கவிரும்புகின்றது. அவர்கள் இதுவரை வ.கி.ம..உ.செயலகத்துடன் தொடர்பு கொள்ளாவிட்டால் கிளிநொச்சியிலுள்ள அதன் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். இப்படித் தொடர்பு கொள்ளுமிடத்து குடும்பத்தினரின் வசதிக்கேற்ப ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் கூடி விவரங்களை சேகரிக்கவும் வசதி செய்யப்படவுள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்,
கரடிப்போக்குச்சந்தி,
கிளிநொச்சி.
தொலைபேசி எண்.:021 - 2285986

# மக்கள் வங்கியின் 44ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை1

மக்கள் வங்கியின் 44ஆம் ஆண்டு நிறைவையொட்டிய விழா கன்னாதிட்டிக் கிளையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு இடம்பெறவுள்ளது.

உதவிப் பிராந்திய முகாமையாளர் அ.குகதாசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக வடவலய உதவிப்பொது முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையர், உதவிப் பிராந்திய முகாமையாளர்கள் ரி.கே.ஆனந்தராஜா, துரைசிங்கம் ரகு ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் ஜெயஸ்ரீ திட்டத்தில் பரிசு பெற்றவர்களான ஜே.பி.ஜீவராஜா, சிவானந்தம், தி.வாசுகி, பொ.சின்னத்துரை, திரு. திருமதி ஆர்.இரவீந்திரன், திரு.திருமதி சி.சிவசுப்பிரமணியம், பிரேமதர்சினி ஸ்ரீதரன் ஆகியோருக்கு தங்கநாணயம் பரிசளிக்கப்படும்.

# பருத்தித்துறை வைத்தியசாலையை தரமுயர்த்தும்படி கோரிக்கை

குருநகர்,ஜூலை1

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை மாவட்டப் பொதுவைத்தியசாலையாக தரமுயர்த்துமாறு சுகாதார அமைச்சிடம் கோரப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறைகளை நீக்கும் பொருட்டு மத்திய மாகாண அமைச்சுகளுடன் தொடர்புகொள்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# சரசாலை -துன்னாலை இடையே வீதிப்பாலம் உடைந்தது!

தென்மராட்சி,ஜூலை1

சரசாலை - துன்னாலை வீதியில் உள்ள பாலம் உடைந்ததால் இவ் வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று சென்றபோது பாலம் உடைந்து லொறி சாய்ந்துள்ளது.

பாலம் உடைந்ததால் இவ்வீதியூடாக மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஆகியவை தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பேருந்து சேவை கனகன் புளியடிச் சந்தியூடாக வேம்பிராய், மந்துவில், வரணி ஆகிய பகுதிகளின் ஊடாக சேவையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## உதயவாக்கு

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிரு!

## நாளை

*ஆனி 18*
*சனிக்கிழமை*
*02.07.2005*
*திதி: ஏகாதசி*
*பிற்பகல் 2.23 வரை*
*நட்சத்திரம்: பரணி*
*முற்பகல் 11.04வரை*
*கார்த்திகை விரதம்*
*ஏகாதசி விரதம்*
*சுபநேரம்: 2.56 - 4.26*
*ராகுகாலம்: 08.56 - 10.26*
*(யாவும் பழைய நேரப்படி)*



## வீரசிங்கம் மண்டபத்தில் பரத நிருத்தியார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

கொக்குவில் கலாபவன மாணவியும் சாந்தினி - சிவனேச தம்பதிகளின் புதல்வியுமான செல்வி தேவத்தி சிவனேசனின் 'பரத நிருத்தி யார்ப்பணம்' நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை பரத சூடாமணி இயக்குநர் பத்மஸ்ரீ அடையார் கே.லக்ஷ்மணனின் முன்னிலையில் இந்த பரத நிருத்தியார்ப்பண நிகழ்வு இடம பெறும். (எ)

## கொடி விற்பனை மூலம் நிதி திரட்டல்

மே மாதம் நடைபெற்ற சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தின் போது யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கம் சுமார் 2 லட்சத்து 63 ஆயிரத்து 984 ரூபாவை கொடி விற்பனை மூலம் திரட்டியுள்ளது என யாழ்.பிரதேச செயலகம் தெரிவித்தது. இப்பணத்தில் ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 98 ரூபா யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியில் திரட்டப்பட்டுள்ளது. இப்பணம் யாவும் இப்பகுதியில் உள்ள விதவைகள், அநாதைகள் மற்றும் ஊனமுற்றவர்களின் சுயமுயற்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியுமன் தெரிவித்தார். (ஐ-51)


வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தேவையா?



தொடர்பு:
மரபுக் கலைச்சுடர்
சிவநெறிக் கலாநிதி
திரு.இராசையா ஸ்ரீதரன்
ஸ்ரீதர் வில்லிசைக்குழு,
291, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.
(37139)(42-14-15)

**கார்கள் விற்பனைக்கு**

நல்லநிலையிலுள்ள
1. 8 ஸ்ரீ XXXX A-60 ஒஸ்டின் கேம்பிறிச் வெள்ளை
2. 8 ஸ்ரீ XXXX மொறிஸ் ஒக்ஸ்போர்ட் சாம்பல்

உடனடி விற்பனைக்குண்டு.
**T.P.: 077 9143171**
(அ/43750)(42-14-15)

**DIPLOMA IN QUANTITATIVE TECHNIQUES**

A/L 2005 பரீட்சைக்கு அமர்ந்த மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான பயனுள்ள கற்கைநெறி (DQT) உடன் ஆரம்பமாகவுள்ளது. வகுப்புகள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும். முழுக்கிரயம் Rs.2700/=
**DIRECTOR / NBMS**
விவரங்களுக்கும் பதிவுகளுக்கும் (சனி, ஞாயிறு)
**BRIGHTMANS,**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(37133) (42-14-15)

**தேவை**

எமது மிக்சர் தயாரிப்பு நிறுவனத்திற்கு மிக்சர் பொதி (பைக்கிங்) செய்யக்கூடிய சுறுசுறுப்பான, வேலை பழகிய, பழக விரும்புகின்ற பெண பிள்ளைகள் தேவை. பைக்கிங் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். 07. 07. 2005 இற்கு முன சமுகமளிக்கவும்.
**ஸ்ரீ மாருதி மிக்சர் தொழிலகம்,**
6/12, விதானையார் வீதி, (37124)
ஈச்சமோட்டை, சுண்டுக்குளி. (42-14-15)

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கு, கற்பகப்பிள்ளையார் வீதியில் (லேன்) கிணற்றுடன் கூடிய 2 பரப்பு 4 குளி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: தர்மலிங்கம் மயூரன்
"சதா காட்வெயர்ஸ்", உரும்பிராய்ச் சந்தி
அல்லது க.வேதநாயகம், (37138)
மீசாலை கிழக்கு, மீசாலை (42-14-15)
(மாவடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)

அனைவருக்கும் புலமைப்பரிசில்

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**

A\L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகள் கீழ்க்குறிப்பிட்ட தினங்களில் ஆரம்பமாகின்றன.

புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 5மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

**Advances Courses**

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

July 31 இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 09/07/2005
Batch II - 15/07/2005
Batch III - 17/07/2005
Batch IV - 31/07/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647


மூன்றாவது ஆண்டு வெற்றிகரப் பூர்த்தி




பொதி விநியோக சேவையில் வரலாறு படைக்கும் TNT 20% விசேட விலைக் கழிவு வழங்குகின்றது!

உங்களுக்கான எமது துரித சேவைகள்
☞ சர்வதேச கூரியர் சேவை
☞ உள்நாட்டுக் கூரியர் சேவை
☞ சர்வதேச தபால் சேவை

20%



நாங்கள் உங்களது அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல அவற்றோடு சேர்த்து உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று அங்கு சேர்க்கின்றோம் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்!

தொடர்புகளுக்கு
TNT கூரியர் சேவை
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை)
☎ 021 222 3771, 0777 270452, 0777 915824.
E-mail:- aitkenspencejf@sltnet.lk

இந்த விசேட சலுகை 2005 ஜூலை 31 வரை மட்டுமே

# கால் தரும் ஜெய்ப்பூர் நிறுவனம் 18 ஆவது ஆண்டில் கால் பதிக்கிறது

**குடாநாட்டில் செயற்கைக்கால் பொருத்துவது உட்பட வலுவிழந்தோருக்குப் பல வழிகளிலும் உதவி வரும் யாழ்.ஜெய்ப்புர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது சேவையில் 18ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றது. இதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் நகரில் தான் முதன் முதலில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பொருத்தமான செயற்கைக் கால் தயாரிக்கும் தொழில்நுட்பம் உருவாகி ஜெய்ப்பூர் செயற்கைக்கால் என உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஜெய்ப்பூர் சவாய் மருத்துவமனையைச் சேர்ந்த சத்திரசிகிச்சைப் பேராசிரியரான பரமோட்கரன் செத்தி என்பவரின் பல வருட ஆராய்ச்சியின் விளைவே இந்த ஜெய்ப்பூர் செயற்கைக்கால். இதனைத் தயாரிக்க தேவையான முக்கியமான மூலப் பொருள்கள் அலுமினியம், இறப்பர், மரக்கட்டை என்பனவே. இந்தக் கண்டுபிடிப்பிற்காக பேராசிரியர் செத்திக்கு பல விருதுகள் கிடைத்தன.

### குடாநாட்டில்...

யாழ்.மண்ணில் 1987ஆம் ஆண்டு யூலை மாதம் உள்நாட்டுப்போரின் உச்சக்கட்டத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் அறிமுகமாகி கிட்டத்தட்ட 18 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வளரும் இவ்விஞ்ஞான யுகத்தில் மிகவும் அண்மைக்காலங்களில் செயற்கைக்கால்களின் உற்பத்தி பல நவீன அம்சங்களையும் கண்ணாடி நார் இழை, பொலிபுறொபைலின் எனப்படும் ஒரு வகையான பிளாஸ்ரிக், இறப்பர், ஈ.வி.ஏ. போன்ற மூலப் பொருள்களை உள்ளடக்கியதாக விருத்தியடைந்துள்ளது. காலத்தின் தேவை அறிந்து யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினர் செயற்கைக் கால் தயாரிப்பில் பல புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தியுள்ளனர்.

வலுவிழந்தோரின் போக்குவரத்து வசதிக்காகவும் மற்றும் சாதாரண நடமாடும் தேவைகளுக்காகவும் இந்த நிலையத்தில் முச்சக்கர வண்டிகள், சக்கரநாற்காலிகள், நடைதாங்கிகள், ஊன்றுகோல்கள் போன்றனவெல்லாம் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவல்லுநரின் நேரடி மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிப்பதற்கு முன்னதாக பயிற்றப்பட்ட இயன் மருத்துவ உதவியாளரும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பவல்லுநரும் பாதிப்புற்றோரை பரிசோதித்து அவரின் பாதிப்பின் தன்மைகளுக்கும் அளவுகளுக்கும் ஏற்றவாறே சக்கரநாற்காலிகள், நடைதாங்கிகள் என்பன வடிவமைக்கப்படுகின்றன. பற்றரியில் இயங்கும் முச்சக்கரவண்டிகள் வலுவிழந்தோர் பாவனைக்குகந்த நடைதாங்கிகள் (சமிக்ஞை ஒலி பூட்டபபட்டவை) என்பனவற்றை விசேட தேவைகளுக்கேற்ப தயாரித்து அளிக்கும் தொழில்நுட்பமும் இந்த நிறுவனத்தில் உள்ளன.

### வைத்திய ஆலோசனைகள்

இதன் இயன் மருத்துவப்பகுதியில் இயன் மருத்துவ சிகிச்சையோடு யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த என்பு முறிவு நெறிவு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கே. உமாபதி அவர்கள் மாதம் ஒருமுறை ஒரு தோபெடிக் கிளினிக்கை இலவசமாக நடத்தி வருகின்றார்.

அத்துடன் சுயதொழிலுக்கான சுழற்சி முறை கடனுதவி மற்றும் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் போன்றவற்றிலும் இந் நிறுவனம் ஈடுபடுகின்றது. இனிவரும் காலங்களில் வலுவிழநதோர்க்கு ஒரு முழுமையான சேவையை அவர்கள் சமூக நீரோட்டத்தில் கலந்து ஏனையோரைப் போன்று சர்வ சுதந்திரங்களையும் அனுபவித்து வாழும் ஒரு நிலையை மீண்டும் வழங்க சில விசேட செயற்பாடுகளில் இறங்கவுமுள்ளது. ஜெய்ப்பூர் அவயவப்பாவனையாளரை மீண்டும் செயற்பட வைத்து பாவனையாளர் குழுக்களை அமைத்து அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தாமே சுயமாகத் தீர்வுகளை எட்டுகின்ற முயற்சிகளுக்கு அடித்தளம் அமைத்துக்கொடுப்பதே தமது குறிக்கோள் என்று ஜெயப்பூர் நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்.



### வேலைவாய்ப்புகள்...

செயற்கை அவயவ பாவனையாளர்களில் பெரும்பாலோர் தமக்கு நேர்ந்த எதிர்பாராத தாக்கங்களில் இருந்து மருத்துவ ரீதியில் தம்மை முழுமையாக பாதுகாத்துக்கொள்ளவும் மற்றும் தங்களின் தனி ஆற்றல்களை வெளிப்படுத்தி உரிய பயிற்சி பெற்று தொழில் வழங்குநர்களின் ஒத்துழைப்புடன் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ளவும் உந்து துணையான **Peer Group Support, Employment Placement** எனக்கூறப்படும் ஆரம்பநிலை தொழிற்பாட்டு வேலைகளில் இந்நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் இந்த முயற்சிக்கும் மேற்கொள்ளவிருக்கும் வலுவிழந்தோர் முன்னேற்றம் சார்பான வேறு சில நடவடிக்கைகளுக்கும் 'மோட்டிவேசன்' அறக்கொடை அமைப்பு ஆளனி உதவிகளையும் மற்றும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தி உதவி செய்து வருகின்றது.

**யாழ்.ஜெய்ப்புர் நிறுவனம்.**

# அரச திணைக்களங்கள் பலவற்றிலும் தமிழ்மொழிப்பயன்பாடு குறைவு!

## கிளிநொச்சி தமிழ்ச்சங்கத் தலைவர் வேதனை

திருநகர்,ஜூலை1

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களங்கள் பலவற்றிலும் தமிழ் மொழிப் பயன்பாடு குறைவாக உள்ளமை வேதனை தருகிறது.

இவ்வாறு கிளிநொச்சித் தமிழ் சங்கத் தலைவர் பரமநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சமாதானத்துக்கான சூழ்நிலை நிலவும் தற்போது கிளிநொச்சியில் பல அரச திணைக்களங்கள் தமது சேவையை விரிவுபடுத்தியுள்ளன. இத்தகைய சூழலில் பல திணைக்களங்கள் தமது அலுவலகத்தில் தமிழ் மொழிப் பயன்பாட்டை தவிர்த்துள்ளமை வேதனை தருகிறது.

ஏற்கனவே தமிழ் மொழி நடைமுறைகளை அறிவுறுத்தி துண்டு வெளியீடுகளை அவர்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். ஆனாலும் அவர்கள் இது தொடர்பில் கரிசனை அற்று உள்ளனர். இந்தப் போக்கு ஏமாற்றம் தருவதாகும். தமிழ் மொழியையும் தாயக மண்ணையும் காக்க ஆயிரக் கணக்கான மாவீரர்கள் செய்த தியாகங்கள் வீண்போகாதவகையில் எமது மொழிவளம் காக்கப்படவேண்டும். இதற்கு திணைக்களத் தலைவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் - என்றார் அவர்.

(ஒ-301)

# பெரியகுளத்தில் வீரமுரசு நிகழ்வு

பரந்தன்,ஜூலை1

பெரியகுளம் பகுதியில் வீரமுரசு நிகழ்வும், மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பும் சமீபத்தில் இடம்பெற்றது.

விசுவாசம் சனசமூக நிலைய மைதானத்தில் பெரியகுளம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அருளானந்தம் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் பொதுச்சுடரை வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.சுடர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன்ரனி ஏற்றிவைத்தார்.

முதல் மாவீரர் லெப்.சங்கரின் திருவுருவப் படத்திற்கு வட்டக்கச்சி பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.ஆரணியும், முதல் பெண் மாவீரர் லெப்.மாலதியின் திருவுருவப்படத்திற்கு பெரியகுளம் கிராம உத்தியோகத்தர் திருமதி சிவராசாவும் ஈகச்சுடர்களை ஏற்றிவைத்தனர்.

கரும்புலி மாவீரர்களின் பொதுப்படத்திற்கு பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்துள்ளவரான சி.அருண்அம்மா ஈகச்சுடர் ஏற்றிவைத்தார். தியாக தீபம் தீலீபனின் திருவுருவப் படத்திற்கு 'புலிகளின் குரல்' நிறுவனத் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் ஏற்றினார்.

இதனை தொடர்ந்து கருத்துரைகளும் மாவரனின் பெற்றோர் கௌரவிப்பும், எழுச்சிக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ஒ-352)

# கற்சிலைமடு விவசாயிகளுக்கு கால்நடைகளால் தொல்லை

ஒட்டுசுட்டான்,ஜூலை1

கற்சிலைமடு கிராமத்தில் கட்டாக்கலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கால்நடை வளர்ப்பவர்கள் பலர் இரவு வேளைகளில் பட்டிகளில் கால் நடைகளை அடைக்காது அலையவிடுகின்றனர் என்றும்-

அவ்வாறு அலையும் கால்நடைகள் பயிர்களை அழித்து வருகின்றன என்றும்-

இதனால் தாம் பெரும் நஷ்டமடைந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் அக்கறைகொண்டு செயற்பட முன்வர வேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுகின்றனர்.

(ஒ-341-202)

# பாதுகை



ராமர் வனவாசம் செய்தபோது பரதனும் சத்ருக்கனும்அவரது பாதுகையை 14 ஆண்டுகாலம் பூஜித்தனர். இதற்கு ஒரு காரணம் உண்டு. வைகுண்டத்தில் ஒரு நாள், திருமால் வழக்கத்துக்கு மாறாகப் பாதுகையைப் பள்ளியறைக்குள் விடுத்துப் பாம்பணையில் படுத்தார். பெருமானுடைய திருமுடிக்குச் சீற்றம் உண்டாயிற்று. முடி, "ஏ, பாதுகையே! உனக்கு அறிவிருக்கின்றதா? கண்ட இடமெல்லாம் மிதிக்கின்ற நீ, படுக்கையறைக்குள் வரலாமா? போ, வெளியே" என்றது. பாதுகை, "முடியே! நானே வரவில்லை. பகவானுடைய திருவடிகள் என்னை உள்ளே விட்டது. வீணாக என் மீது ஏன் கோபிக்கின்றாய்" என்றது. 'பாதுகையே! அதிகம் பேசாதே. நான் பெருமானுடைய தலைக்குமேல் இருக்கும் தகுதியுடையவன். என்னுடன் பேசவும் உனக்கு யோக்கியதை கிடையாது. ஆதலினால் சீக்கிரம் போ, போ," என்றது. "முடியே!ஏன் வீண் பெருமை பேசுகின்றாய்? ஐயன் பாதத்தை நம்பினோர் நலம் பெறுவர். அடியார்கள் அனைவரும் அடியைத்தானே விரும்புகின்றார்கள். எனவே, என்னை இகழாதே! சங்கும்சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து, "ஏ செருப்பே! உனக்கென்ன அதிகம் வாய்? உன்னை, நசுக்கி எறிவோம்... வாயை மூடிக் கொண்டு வெளியேபோ'' என்றன. பாதுகை, நாராயணரைப் பார்த்து, "கருணைக் கடலே! நீர் என்னை உள்ளே விடுத்து இவர்களைக் கொண்டு இகழச் செய்வது முறையா" என்று முறையிட்டது. திருமால், "பாதுகையே! நீ வருந்தற்க" என்று கூறிவிட்டுப் பின்னர் முடியைப்பார்த்து, "முடியே! நீ தற்பெருமை பேசிப் பாதுகையை நிந்தித்தபடியால், அடுத்துவரும் ராமாவதாரத்தில் பதினான்கு வருடங்கள் இப்பாதுகையின் மீது இருக்கக்கடவது: சங்கே! சக்கரமே! நீவிர் பாதுகையை இகழ்ந்தபடியால், ராமாவதாரத்தில் பரதனாகவும், சத்ருக்கனாகவும் பிறந்து, இப்பாதுகையைப் பதினான்கு ஆண்டுகள் வழிபடக்கடவது" என்றார். அப்படியே நிகழ்ந்தது.




எளியோரை எள்ளாமை வேண்டும்

**-ராமகிருஸ்ணர்.**

# சமகால அரசியல் தொடர்பாக மாந்தை மேற்கில் கருத்தரங்கு

பரந்தன்,ஜூலை1

மாந்தை மேற்குப் பிரதேசத்திலுள்ள அதிபர், ஆசிரியர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்தவாரம் ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு மடுவலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம் தலைமை வகித்தார். நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புலிவளவன் ஏற்றினார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், தமிழீழ நிர்வாகச் சேவைப் பொறுப்பாளர் பூவண் ணன் ஆகியோர் கலந்துகொண்டு சமகால அரசியல் செயற்பாடுகளையும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விளக்கத்தினையும் அதிபர் ஆசிரியர்களுக்குக் கூறினர். (ஒ-341)

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 14-07-2005 பி.ப. 2.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 15-07-2005 ந.ப. 12.00 மணிவரை.

கேள்வி திறந்து பார்க்கும் திகதி: 15-07-2005 பி.ப. 3.00 மணிக்கு.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| 01. மின்சார நிலைய வீதி. இரண்டாம் தடவை தாரிடல். | ---- | 575.00 |
| 02. சுன்னாகம் மீன் சந்தை திருத்தம். | 3000.00 | 575.00 |
| 03. சுன்னாகம் மக்கள் வங்கிக் கட்டட திருத்தவேலை. | 1500.00 | 575.00 |
| 04. சுன்னாகம் நவீன சந்தைக் கட்டடத்தின் கேற்றுக்களை மறுசீரமைத்தல். | 2000.00 | 575.00 |
| 05. புன்னாலைக்கட்டுவன் விவசாய வீதி திருத்தம். | 10000.00 | 575.00 |
| 06. சுன்னாகம் வடிகால் புனரமைப்பு. | 5000.00 | 575.00 |
| 07. உடுவில் பொதுநூலகம் புனரமைப்பு. | 7500.00 | 575.00 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதியை *"செயலாளர்", வலிகாமம் தெற்கு, பிரதேசசபை, சுன்னாகம்* என்ற முகவரிக்கும் அதன் பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்", உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2005-06-29. (சி-43746)(26-14-17)

## வீதி மோசம்

யாழ்ப்பாணம்,ஜுலை1

கோப்பாய் தெற்கு டச்சு வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ஒ-7-203)

## மருத்துவ சேவை

தொல்புரம்,ஜுலை1

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மணடபத்தில் பிரதி புதன் கிழமை தோறும் இலவச மருத்துவ சேவை இடம் பெறுகிறது.

இந்தச் சேவை 3.30 மணி தொடக்கம் டாக்டர் பொன. சினனத்தம்பி தலைமையில் நடைபெற்று வருவதாகச் சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் செ.மோகனதாஸ் சுவாமி தெரிவித்துள்ளார்.(ஒ-119)

## பிரதேச சபைக்கு உழவு இயந்திரம்

வலி.தெற்கு,ஜுலை1


மானிப்பாய் பிரதேச சபையின் உபயோகத்துக்கென புதிய உழவு இயந்திரம் ஒன்றை 'நிகொட்' நிறுவனம் வழங்கியுள்ளது.

'நிகொட்' நிறுவனம் தனது உதவித் திட்டத்துக்கமைய பிரதேச சபையின் கோரிக்கையை ஏற்று இந்த உழவு இயந்திரத்தை வழங்கியுள்ளது.

உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி மானிப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

'நிகொட்' நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.நவரட்ணராஜா இந்த இயந்திரத்தை பிரதேச சபையின் களஞ்சியப் பொறுப்பாளர் த.சிவசுதனிடம் கையளித்துள்ளார்.

(ஜ-152)

இதோ யாழ்.நகரில் அறிமுகப்படுத்துகின்றோம்
மேதஹரணி (Meda Harani)
உங்கள் இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்தைச் சரியான அளவில் கட்டுப்படுத்துகின்றது. ஒருமுறை பாவித்துப் பயன்பெறுங்கள். ஸ்ரீ லங்கா ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பு மேத ஹரணி (MEDA HARANI)


யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம். தொலைபேசி:222 2567

புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)
G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.
Minimum Requirement: G.C.E. A/L 3 Passes
ஆரம்பம்: 02-07-2005

CIMA
Foundation Level & Intermediate Level
Medium English
Minimum Requirement: G.C.E. O/L (3C) Passes
ஆரம்பம்: 17-07-2005

aat (SriLanka)
Foundation Level, Intermediate Level & Final
Medium: Tamil & English Exam: Jan. 2006
Minimum Requirement: G.C.E. O/L 5 Passes or G.C.E.A/L 2 Passes
ஆரம்பம்: 17-07-2005 Medium: English & Tamil

Further Details: (C/43688)(26-14-17)
Director,
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
464, Hospital Road (Near Commercial Bank), Jaffna.

இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்
இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக்கொடுக்கப்படும்.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
ந. பாலகிருஷ்ணன்
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943
(36937)(54-

TRRO Computer Training Center
TRRO LTD
புதிய பிரிவிற்கான கணனிக் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன
Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
GIT A/L
Certificate Courses
Microsoft Word XP
Microsoft Excel XP
Microsoft Access XP
Microsoft Visual Basic
Corel Draw
Adobe Page Maker
Adobe Photoshop
விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம். [TRRO] 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
கணனிப் பயிற்சி நிலையம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் [MC Leod Hospital] கே.கே.எஸ். வீதி, இனுவில்
விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து
Chairman
T.R.R.O
106, 4th Cross Street, Jaffna
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (C/43724)
பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்
விண்ணப்ப முடிவு திகதி: 10.07.2005

## முதலாம் வருட இதய அஞ்சலி

தோற்றம் 22 - 09 - 1975



மறைவு 11 - 07 - 2004

### அமரர் தேவராசா உதயகுமார்

(வணிகபீட மாணவன். 2002/2003 கல்வியாண்டு - யாழ்.பல்கலைக்கழகம்)

திதி: தசமி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் இதயம்
ஈண்டு நாம் உம்மை நினைத்தே வாழ்கின்றோம்
மாண்டுநீர் போனதால் மனம் பதைபதைக்கிறதே
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் முன்பு இவரது இறுதிக்கிரியைகளில் கலந்து எங்கள் துக்கத்தில் பங்குகொண்டவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*1169C, திருநகர்,*
*கிளிநொச்சி.* (37120)(42-26-14-17) - குடும்பத்தினர்.

நிதியில்லை என்பதால் திறமை மழுங்கிடக்கூடாது;

# தென்கொரியாப் போட்டியில் பங்கேற்க யாழ். வீர, வீராங்கனைகளுக்கு உதவுங்கள்!

## நல்லுள்ளங்களுக்கு விளையாட்டு அதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த திறமை யான விளையாட்டு வீர,வீராங்கனைகள் 9 பேர் தென்கொரியாவில் இடம்பெறவுள்ள போட்டியில் பங்கேற்க அனுசரணை வழங்கி உதவுங்கள் என்று யாழ். மாவட்ட விளை யாட்டு அதிகாரி ஆர்.ரொகான் ராஜசிங்கம் நல்லுள்ளம் படைத்தோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச மதங்களுக்கிடையிலான சமா தான விளையாட்டு விழா வருடந்தோறும் தென்கொரியாவில் இடம்பெறுகிறது. கடந்த வருடம் இப்போட்டியில் யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த இரு வீரர்களும், ஒரு வீராங் கனையும் பங்கேற்றனர். இவர்கள் பங்கேற்ற பிரிவுப் போட்டிகளில் தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தனர். இவர்கள் தென் கொரியா செல்வதற்கான பயணச்செலவு மிகுந்த சிரமங்களின் மத்தி யிலேயே ஏற்பாடு செய் யப்பட்டது.

இந்த வருடம் இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக திறமைமிக்க வீர, வீராங் கனைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏதுரன், ரி.கவிராஜ், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.சிறினிவாஜ், ரி.கஜந்தன், ஸ்ரான்லி கல்லூரியைச் சேர்ந்த கே.தர்சினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யைச் சேர்ந்த வி.கஜீதா, சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் எம்.சஞ்சீவன், தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி பழைய மாணவர்கள் எஸ்.கமலமோகன், ஆர்.ராஜ காந்தன் ஆகியோரே தெரிவாகியுள்ளனர். இவர்களுடன் பயிற்சியாளர் ஒருவரும் உடன் செல்லவேண்டியுள்ளது.

இவர்கள் தென்கொரியா சென்று போட்டி யில் பங்கேற்று திருப்ப ஒவ்வொருவருக்கும் சுமார் 82 ஆயிரம் ரூபா வரை பயணச்செல வாகத் தேவைப்படுகிறது.

இவர்கள் வெளிநாட்டில் தமது திறமையை வெளிப்படுத்துவதுஇவர்களுடையபாடசாலை, சொந்த ஊர், யாழ். மாவட்டம் ஆகியவற்றுக்கு மட்டுமன்றி ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் பெருமைசேர்க்கும் விடயமாகும். அத்துடன், இத்தகைய போட்டிகளில் நமது விளை யாட்டு வீர, வீராங்கனைகள் பங்கேற்பது எதிர்காலத்தில் சர்வதேசப் போட்டிகளில் நம் மவர்கள் முத்திரை பதிப்பதற்கான அத்திவார மாகவும் அமையும்.

இந்த நிலையில் இவர்கள் தென்கொரியா சென்று திரும்புவதற்கான பயணச்செலவுக்கு, பங்களிப்பாகவோ, அனுசரணையாகவோ உதவி வழங்குமாறு விளையாட்டு அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-190)

# கொக்குவில் மத்தி ச.ச.நிலையம் நடத்தும் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

கொக்குவில் மத்திய சனமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையே லீக் முறையில் நடத்தும் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்ப மாகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 14 விளை யாட்டுக் கழகங்கள் நான்கு பிரிவுகளாக இப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

ஏ - பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி, ஸ்ரான்லி வி.கழகம், யாழ். மத்திய வி.கழகம்- ஆகியவையும் -

பி - பிரிவில் யங்ஸ்ரர் வி.கழகம், ஸ்கந்தா ஸ்ரார் வி.கழகம், ஜொலிஸ்ரார் வி.கழகம், அரியாலை சென்றல் வி.கழகம் ஆகியவையும் -

சி - பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.கழகம், மானிப்பாய் பரிஸ் வி.கழகம் சென்ரலைட்ஸ் வி.கழகம், ஓல்ட் கோல்டஸ் வி.கழகம் ஆகியனவையும் -

டி- பிரிவில் பற்றீசியன்ஸ் வி.கழகம். கிறாஸ் கொப்பர்ஸ் வி.கழகம், ஜொனியன்ஸ் வி.கழகம் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

நாளை ஆரம்பமாகும் இப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் 24,30 ஆம் திகதிகளி லும் 31ஆம் திகதி அரையிறுதி ஆட்டங்க ளும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி இறுதி யாட்டமும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

முதல் சுற்றுப் போட்டிகள் அனைத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டி களாக இடம்பெறவுள்ளன. (ஓ-86)

## வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

தேசிய கனிஷ்ட பிரிவு பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக் கிழமையும் நாளை சனிக்கிழமையும் குரு நாகல் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற் காக யாழ்.மாவட்ட அணி நேற்று குருநாகல் புறப்பட்டுச்சென்றது. (ஓ-190)

# உதைபந்தாட்ட, வலைபந்தாட்டப் போட்டிகள்

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதர வுடன் தென்மராட்சி விளையாட்டுப் பேரவை நடத்தும் உதைபந்தாட்டம் மற்றும் மின்னொ ளியில் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

தென்மராட்சி விளையாட்டுக்கழகங்கள் பங்கேற்கும் இப் போட்டிகள் கைதடி ரேஸ் வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் உதைபந்தாட்டத்தில் பங்கேற்கும் அணிகளின் விவரம் வருமாறு,

ஸ்ரீ மகாவிஷ்ணு வி.க. எதிர் ஸ்ரீ தாஸ் வி.க. வளர்மதி வி.க. எதிர் ஞானதீபம் வி.க.



கூவில், கீரிமலை சிவானந்தா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா, பன்னாலையில் உள்ள முன்பள்ளி முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. இதில் இடம்பெற்ற உடற்பயிற்சி நிகழ்வைப் படத்தில் காணலாம்.

(படம்: சங்கனைச் செய்தியாளர்)

# வலைபந்தாட்டப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கைதடி,ஜூலை1

தென்மராட்சி விளையாட்டுப்பேரவை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நடத்தும் பெண்களுக்கான வலைபந்தாட்டப் பயிற்சி முகாம் விரைவில் தென்மராட்சியில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் தென்மராட்சியைச் சேர்ந்த வலை பந்தாட்டக் கழகங்கள் தங்கள் கழகத்தின் பெயர், முகவரி மற்றும் பங்கு கொள்ளும் வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் என்பனவற்றை பூரணமாகத் தயாரித்து எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி விளை யாட்டுப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை சாவகச்சேரி தாஸ் உணவகம், வரணி இளைஞர் விளையாட்டு கழகம் , கைத டிச் சந்தி ஸ்ரீராம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளுமாறும் தென்மராட்சி விளையாட்டுப் பேரவையி னர் கேட்டுள்ளனர். (ஓ-75)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

தமிழீழ விளையாட்டுத்துறையின் வடம ராட்சிப் பிரிவின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி - சென். சேவியர் வி.க எதிர் விக்கிரமன்ஸ் வி.க.

பிற்பகல் 4.30 மணி - அல்வாய் நண்பர் கள் வி.க. எதிர் சென் அந்தனிஸ் வி.க

(ஓ-410-203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை1

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடை பெறவுள்ள ஆட்டத்தில் கைதடி வளர்மதி வி.கவும் சுன்னாகம் கலைவாணி வி.கவும் மோதுகின்றன.

(ஓ-75-203)

விளையாட்டு



ஜேர்மனியில் நடந்த கான்படரேசன் உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டதில் ஆர்ஜன்டீனாவை பிரேஸில் 4 : 1 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது. ஆட்டத்தின் ஒரு கட்டத்தைப் படத்தில் காணலாம்.

# சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கள்ளப்பாடு அணி வெற்றிபெற்றது

புதுக்குடியிருப்பு,ஜூலை1

முல்லைத்தீவு கள்ளப்பாடு, வண்ணாங் குளம் கிராம அணிகளுக்கிடையே இடம் பெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கள்ளப்பாடு அணி வெற்றிபெற்றது.

கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

15 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் கள்ளப்பாடு அணி வண்ணாங்குளம் அணியை 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தால் இவ்விரு கிராமங் களும் முற்றாக அழிந்தன. அழிவின் பின் அக்கிராம வீரர்கள் பங்குபற்றும் முதலாவது விளையாட்டுப் போட்டி இதுவாகும்.

(ஓ-353-202)

கரும்புலிகள் தினத்தையொட்டி

# முள்ளியவளையில் உதைபந்தாட்டம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு முல் லைத்தீவு உதைபந்தாட்ட சம்மேளனமும் முல் லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையும் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெறும்.

இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அணிகளான வித்தியா வி.க., செல்வா வி.க., சென். யூட் வி.க., விக்கினேஸ்வரா வி.க., சென். அன்ரனிஸ் வி.க., சுப்பர்ராவ் வி.க., உதிக்கும் திசை வி.க. ஆகியன மோதவுள் ளன. (ஓ-353-202)

# முல்லை.உதைபந்தாட்ட அணி அமைப்பு

புதுக்குடியிருப்பு,ஜூலை1

முல்லைத்தீவு மாவட்டத்திற்கென உதை பந்தாட்டச் சம்மேளனமும் உதைபந்தாட்ட அணியும் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்படி அணியில் இடம்பெறும் வீரர்க ளுக்கான பயிற்சி புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. மாவட்டத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளையும் இணைத்து 25 பேர் கொண்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறைப் பொறுப்பா ளர் காளி தெரிவித்தார். (ஓ-353-202)

# சாவகச்சேரி மைதானத்தில் ஆடுகளங்கள் அமைப்பு

தென்மராட்சி,ஜூலை1

சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் உபைந்தாட்டக் கம்பங்களும், கிரிக்கெட் ஆடுகளமும் அமைக்கப்பட்டுள் ளன. சாவகச்சேரி ஸ்ரீதாஸ் பொழுதுபோக்கு விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சாவகச்சேரி வீ.எம்.கே.நிறுவனத் தினர் இவற்றினை அமைத்துள்ளனர்.

இந்த விளையாட்டு மைதானம் அண் மையில் புனரமைக்கப்பட்டதையடுத்து விளை யாட்டு வீரர்கள் இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். (ஓ-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலிருந்த நல்ல நிலையிலுள்ள ட்ராக்டர் Massey Fergyson, Model, MF 135 விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6936732 உடுவில் மேற்கு, சுன்னாகம். (37143)

பாவித்த நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப்பெட்டி, காஸ் அடுப்பு ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 - 222 7498. (37140)

Toyata Town Ace 250 - xxxx தொடர் இலக்கமுடைய வான் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.61, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P: 0777305533. (சி-43751)

சார்ப் ப்றொஜெக்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு S. சிறி, பிறவுண் வீதி,கொக்குவில் கிழக்கு, (கல்வாரி தேவாலயத்திற்கு அருகில்) கொக்குவில். T.P: 0777 111400 (37080)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 27-06-2005 திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படுகிறது. எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ற் -'19, முருகேசர் ஒழுங்கை, நல்லூரிலும் பெற்றுக் கொள்ளலாம். (37086)

### விற்பனைக்கு

டி.பிரிசர் விற்பனைக்குண்டு.
நியூ நிக்கோ கோப்பி
114, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-43779) (21-45-15)

### தேவை

யாழ்.நகரப் பகுதியில் அமைந்திருக்கும் புகைப்பட நிலையத்திற்குப் பெண் காசாளர் தேவை. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். கணனி அறிவு இருப்பின் அதனையும் குறிப்பிடவும்.

விளம்பர இலக்கம் 2637
உதயன், யாழ்ப்பாணம்.
(37159) (21-45-15)

### அலுவலகப் பணியாள் (பியோன்) தேவை

எமது ஸ்தாபனத்தின் அலுவலகத்திற்கு க.பொ.த (சா.த) தேர்ச்சி பெற்ற சுயமாகச் சிந்தித்துச் செயற்படக்கூடியவரும் சுறுசுறுப்பாக வேலை செய்யக் கூடியவருமான பணியாள் தேவை.

தொடர்பு:
திட்ட முகாமையாளர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்,
கம்பனி லிமிடெட்
344, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல. 021- 222 5760.
(சி-43744) (21-45-15)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஸ்ரேஷனுக்கு அருகிலும் பஸ் நிலையத்திற்குக் கிட்டிய தூரத்திலும் 4 பரப்பு 5 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: J.T. சபாநாதன், 'புஷ்பவாசா' அராலி வடக்கு, வட்டுக்கோட்டை T.P. 0777-705784, 0776098718. (37155)

### வாடகைக்கு

முதலாம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 739836 (37158)

### தவறிவிட்டது

நாவலம்பதி, அச்சுவேலியைச் சேர்ந்த செல்லத்துரை யமுனாராணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (746142773v) 26.06.2005 கண்டி வீதிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். நாவலம்பதி, அச்சுவேலி. (37157)

### புதிய கட்டடம்

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி 72 ஆம் இலக்கக் கிளைக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.சற்குனலிங்கம் தெரிவித்தார்.
இந்தக் கட்டடம் சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் சங்கத்துக்குச் சொந்தமான காணியிலே அமைக்கப்படவுள்ளதாகவும் -
இதற்கான வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பமாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-13)

### பதவி வெற்றிடங்கள்

GURNGY COMPUTER TECHNOLOGY

1. வரவேற்பாளர் 2. தொழில்நுட்ப உதவியாளர்கள்
3. சந்தைப்படுத்துநர்கள்

பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பிக்குக.
- கிராம சேவையாளர் நற்சான்றுப் பத்திரம்
- கல்விச் சான்றிதழ்கள்
- தகைமைச் சான்றிதழ்கள்

GURNGY COMPUTER TECHNOLOGY (PVT) LTD.
No.97, Station Road, Jaffna. T.P. 0777-387458.
(21-15-45) (37136)

### 16 ஆம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 - 11 - 1939 | 28 - 06 - 1989 |



அமரர் கந்தையா குலேந்திரா
S.L.A.S
(உதவி அரசாங்க அதிபரும், வலி.கிழக்குப் பிரதேச சபை விசேட ஆணையாளரும்)

எண்ணியிருந்த சிந்தனைகள் இமைக்கமுன்
எண்ணாமல் சிதறி ஆண்டு பதினாறானதையா!
கண்ணின் மணியாய் உயிரிற் கலந்தவரே
மண்ணில் வாழ்ந்த மகத்துவத்தை மறவோம்!

ஈஸ்வரி வாசா,
கொக்குவில்.
மனைவி: கு.சிவாஸ்வரி,
மகன்: கு.சிவேந்திரம்,
சகோதரர்கள்.
(37142)(21-

### மாபெரும் சதுரங்கப் போட்டி

எமது நிறுவனத்தினால் மாபெரும் சதுரங்கப்போட்டி ஒன்று நடத்தப்பட உள்ளது.

1. 15 வயதிற்கு உட்பட்டோர் (ஆண்கள், பெண்கள்)
2. 19 வயதிற்கு உட்பட்டோர் (ஆண்கள், பெண்கள்)
3. 25 வயதிற்கு உட்பட்டோர் (ஆண், பெண்)
4. 25 வயதிற்கு மேற்பட்டோர் (ஆண், பெண்)
5. கலப்பு

பங்குபற்ற விரும்பும் அனைவரும் எமது நிறுவனத்திற்கு வந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்துகொள்ளவும்.
திகதி 01.07.2005 - 15.07.2005

GURNGY COMPUTER TECHNOLOGY (PVT) LTD.
No.97, Station Road, Jaffna.
(37137) (21-45-15)

### BAIRAHA புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்

35 நாளில் 2Kg க்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 02.07.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்பு:
- ராஜீவ் பாம் ஆனைக்கோட்டைச் சந்தி கிளை
- தாரகை கால்நடைத்தீவன விற்பனை நிலையம், முதலாம் கட்டை, பருத்தித்துறை.
- ரஞ்சித், 517- ஸ்ரான்லி றோட்.
- P. ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- மதுரா கால்நடைத் தீவன விற்பனை நிலையம் 221, ஆஸ்பத்திரி வீதி
- மாருதி பாம், வடக்கம்பரை, தொல்புரம்.
- நாதா மாவடி, வட்டுக்கோட்டை.
- கௌரி ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

T.P.No.: 222 3529, 222 2867,0776090926 (37038) (21-15-45)

### நெஞ்சைவிட்டகலா 31 ஆம் நாள் நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 - 11 - 1930 | 01 - 06 - 2005 |



அந்தோனி அபிஷேகநாதன்

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
நாள்கள் முப்பத்தொன்று ஆகிவிட்டனவே
எம்மால் இதை நம்பமுடியவில்லை
உங்கள் வார்த்தைகளும் செயல்களும்
எம் கண்முன்னே நிழலாடுகின்றன
உங்கள் குடும்பத்தினர் யாவரும்
உங்களை நினைத்தே வேதனைப்படுகின்றோம்
உங்கள் ஆன்மா இறைவனில்
இளைப்பாற யேசுவை வேண்டுகின்றோம்.

இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எமது தந்தையின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி.

15/23, மத்திபுஸ் வீதி,
யாழ்ப்பாணம். (37156)(21-45-15)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## IDM Computer Studies Pvt (Ltd) Jaffna Branch

20+ YEARS e-Sri Lanka by IDM — The Nation's ICT Academy | ROTARACT CLUB

நல்லூர் றோட்டறக்ட் கழக அனுசரணையுடன் IDM கணனி நிறுவனம் இணைந்து வழங்கும்

# மாபெரும் இலவசக் கணனிப் பயிற்சிக் கருத்தரங்கு

காலம்: 02.07.2005 (சனிக்கிழமை)
நேரம்: 10.00 மணி (பு.நே)
இடம்: வேம்படி மகளிர் கல்லூரி

காலம்: 03.07.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: 10.00 மணி (பு.நே)
இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

கருத்தரங்கில் பங்குபற்றுகின்ற அனைவருக்கும் எமது நிறுவனத்தால் பெறுமதிமிக்க சான்றிதழ்களும், சலுகைகளும் வழங்கப்படும்.

2005 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் கணனித்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயன்பெறவும்.

(C/43762) (54-15-17)

No. 216 Navalar Road, Jaffna. T.P: 021-4591398, 0777-110862.

## Modern Education Centre
Nelliady Point Pedro

**புதிய பிரிவு ஆரம்பம்**
**Spoken English**
**With Grammar**
**By: Mr.K.Nishanthan**

நெல்லியடி: 01.07.2005 வெள்ளி காலை 8.00 (ப.நே.),
(திங்., புதன், வெள்ளி (காலை 8.00 ப.நே.)
பருத்தித்துறை: 01.07.2005
வெள்ளிக்கிழமை 2.00 (ப.நே.)
(திங்கள், புதன், வெள்ளி பி.ப.2.00 (ப.நே.)
(இலகுவான முறையில் எழுத, வாசிக்க, பேச கற்பிக்கப்படும்).

(C/43749)(42-14-11)


## ரணில் புட்டபர்த்தி பயணம்

கொழும்பு,ஜுலை1

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

புட்டபர்த்திக்குச் சென்று அங்கு பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் ஆசியைப் பெறவுள்ளார்.

சாயிபாபாவுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடவுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதற்காக அவரிடம் ஆசிபெறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-க)


## சுற்றுலாப் பயணத்திற்கான வாய்ப்பு

நன்கு பரிச்சயமுள்ள வழிகாட்டியின் உதவியுடன் இலங்கையில் உள்ள சுற்றுலா மையங்களுக்கு உங்களை அழைத்துச் செல்வோம்.

*(நான்கு ஆசனங்களுக்கு ஓர் ஆசனம் இலவசம்)*

மேலதிகத் தொடர்புகளுக்கு:

**போக்கஸ்,**
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
(இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக).
T.P.: 0777738313.

(37052)(26-11-14-42)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து




ஒட்டுவெளி, மிருசுவிலைச் சேர்ந்த ஜெகநாதன்-புஸ்பதா தம்பதியினரின் செல்வப் புதல்விகளான

**செல்வி விஷ்ணவி,**
**செல்வி விகாசினி**

ஆகியோர் தமது முதலாவது பிறந்தநாளை இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை சப்பச்சிமாவடி, சாவகச்சேரியில் வெகுசிறப்புடன் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்கள்.

செல்விகள் இருவரையும் அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, ராணிப் பெரியம்மா, நிமாலினி அக்கா, இராசுப்பெரியப்பா, பெரியம்மா, சுகிர்த்தா, சுஜீவன்,சுவர்ணா,சுவிஸ் நதன் சித்தப்பா, சித்தி, சபீனா, நிவேதிகா, தேவிப் பெரியம்மா, காந்திப்பெரியப்பா, யோகன் பெரியப்பா குடும்பம், ரகு குடும்பம், இத்தாலி பாஸ்கரர்மாமா, மாமி, மிதுலா, மதுஷன், இரத்தினம் குடும்பம், லண்டன் மலர் அத்தை குடும்பம், ஜேர்மனி அப்பம்மா, மாலா அத்தை குடும்பம் ஆகியோர் ஒட்டுவெளி முருகன் அருளால் பல்லாண்டு காலம் பலகலையும் கற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**செ.ஜெகநாதன் (தந்தை)**

இந்தியாவில் தங்கியிருந்த வேளை பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்றைய சிறப்புறு நாளில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒட்டுவெளி, மிருசுவில்.

(36546) (56-45-15)


பெங்களூர் பல்கலைக்கழகத்தில் படியுங்கள்

## பிருந்தாவன் கல்லூரி

(முன்னாள் தேசிய முதல் நிலைக் கல்லூரி)
அரசினால் அங்கீகரிக்கப்பட்டு பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றது
2ஆம் குறுக்கு, பூப்பசந்திரா, RMV Extn. 2nd Stage, பெங்களூர் 94,இந்தியா.
தொலைநகல்: info@Brindavan college.com/enquiry@ brindavan college.com
WWW.brindavan college.com

நிர்வாகநம்பிக்கையாளர் / அதிபர் ஆகியோரால் நடத்தப்படும்.
இலவசக் கருத்தரங்கு மற்றும் உடன் உள்வாங்கல்,கொழும்பில் கொழும்பு ஹில்டனில் 03-07-2005 ஞாயிற்றுக்கிழமை காலை9.30 மணிக்கு
கருத்தரங்கின் பின்னர் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை உடன் உள்வாங்கல

| | |
|---|---|
| B.Sc. நுண் உயிரியல், உயிரியல் தொழில்நுட்பம், மரபியல், கணனிவிஞ்ஞானம் | B.C.A B.Com B.B.M |
| M.Sc. உயிரியல் தொழில்நுட்பம், நுண் உயிரியல், பிரயோக மரபியல் | M.C.A. M.B.A |

தொலைக்காட்சி "ARTV" அலை வரிசையில் 01.07.2005 மாலை 7.30இற்கு இது தொடர்பான ஒளிபரப்பு இடம்பெறும்.

- ▲ 42 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பு.
- ▲ கடந்த 11 ஆண்டுகளில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கல்லூரியினூடாக பெங்களூர் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளை மேற்கொண்டுள்ளனர்.
- ▲ கருத்தரங்கின் போது இட ஒதுக்கட்டை பெறுவோருக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
- ▲ தவணைக் கட்டணவசதி வழங்கப்படும்.
- ▲ 2005ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்குக் காத்திருக்கும் மாணவர்களும் இடஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
- ▲ இக்கல்லூரியினூடாக ஏற்கனவே 350 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
- ▲ இடஒதுக்கீட்டுக்கான கட்டணம் $ 400 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்குச் சமமானதொகை.

Company Secretarial Services (PVT)Ltd.
# 285C-1/1, Stanley Tillakaratne Mawatte,
JubileePost, Nugegoda.

தொடர்புகளுக்கு: 011-2854438, 0777-387273, 011-2811524, 0777-317043, 038-2232657, 038-2234154.

(சி-43719)(42-16-13)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 12 - 1939

மறைவு 24 - 06 - 2003



## அமரர் சோமையா சுப்ரமணியம்

ஈராண்டு ஓடி மறைகிறது - எங்கள்
ஈரவிழியோடு மிதக்கும் நினைவுகளில்
இயல்பால் தெரியும் - உங்கள்
இனிய முகம்!

வேராகி நின்றெம்மை
பார்போற்ற வைத்தீர்கள்
விழுதாகி எங்கள்
விருட்சத்தின் பலமாகி,
விண்ணேகி விட்ட தலைவா,

மறைவாகிப் போனது ஊனுடல்தான்,
மண்ணுலகில் உங்கள் புகழ்வாழும்!

மகத்தான 'சேவை'களில் உயிர்வாழும்
சத்தியத்தின் மேன்மையொடு
'சற்சங்கம்' சாந்தி தரும்!
நித்தமுங்கள் நினைவுகளில்
நின்றுழலும் எம் செயலில்
நீங்கள் ஏற்றி வைத்த தீபம்
நீடித்து ஒளிவீசும்!

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37108) (42-14-11)

## மரண அறிவித்தல்

## கனகன் இராசதுரை



யூலன் வீதி, அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகன் இராசதுரை 28.06.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகன் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் அரசன் - சேதி ஆகியோரின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் சிவா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான குகேந்திரன் (மாவீரர்), ஜெயக்குமார் மற்றும் கோகுலன் (பிரான்ஸ்), புஸ்பாகரன், டினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேஸ்வரி (பிரான்ஸ்), சுமிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஐயாத்துரை காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, குணரத்தினம் மற்றும் நவரத்தினம், இராசரத்தினம், ரவிச்சந்திரன், கமலாதேவி, லலிதாதேவி, இரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவலிங்கம், அமுதலிங்கம், குலசிங்கம், மோகலிங்கம் (குவைத்), சந்திரன், வரதன், ஜமுனாதேவி, சாந்தி ஆகியோரின் மைத்துனரும் அபிவர்ணன் (பிரான்ஸ்), வானுஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு வடக்கு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யூலன் வீதி,*
*அச்செழு,*
*நீர்வேலி.*

தகவல்:
இ.புஸ்பாகரன் (மகன்),
கு.இராசலிங்கம் (மைத்துனன்)

(37115)(42-11-14)

## சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயான அபிவிருத்திச் சபை

### பொதுக்கூட்ட அழைப்பு

மேற்படி எமது இந்துமயானத்தை அபிவிருத்தி செய்வதற்கு சாவகச்சேரி நகர சபையுடன் இணைந்து பணியாற்றுவதற்காக மயான அபிவிருத்திச்சபை ஒன்றினை யாப்பு ரீதியாக உருவாக்குவதற்கான பொதுச்சபைக் கூட்டம் கீழ்வரும் அட்டவணைப்படி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடம்: சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபம்
காலம்: 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி

இக்கூட்டத்திற்கு நகரசபை எல்லைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்களை சமுகமளித்து தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C-43786-42-11-15) தற்காலிக செயற்குழு
சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயான அபிவிருத்திச் சபை.

## 81ஆவது பிறந்தநாள் வாழ்த்து

01.07.1924



### திரு.முருகப்பா பஞ்சாபிகேசன்

(நாதஸ்வரம்)

இசைப் பேரறிஞர் கலாபூசணம்

(மனைவி பஞ்சாபிகேசன் இரத்தினம்)

நீடூழி வாழ்க எனவாழ்த்துவோர்:-
சிவசாமி நாகேஸ்வரி (சங்கத்தானை)
சந்திரமோகன் லதா குடும்பத்தினர் (கொழும்பு)
சிவமோகன் தாரணி குடும்பத்தினர் (சங்கத்தானை)
சிவரஞ்சன் விஜிதா குடும்பத்தினர் (நோர்வே)
சிவரூபன் வாசுகி குடும்பத்தினர் (பருத்தித்துறை)
முருகதாஸ் கௌரி குடும்பத்தினர் (இனுவில்)
சிவபாலன் நந்தினி குடும்பத்தினர் (ஆஸ்திரேலியா)

**சிவசாமி நாகேஸ்வரி**
(மைத்துனி)

(37146)(42-15-11)

## 29.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1619

03 11 31 44 05

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.35,84,350/- வெல்லப்படவில்லை

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 35,84,350/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 32 | 5,000/- | 1,60,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 484 | 1,000/- | 4,84,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,577 | 500/- | 7,88,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,599 | 40/- | 9,43,960/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,360 | 20/- | 4,47,200/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,35,463 | 10/- | 33,54,630/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 44,80,600/-

200417718-4-48
200402967-1-15
200401300-0-75
200413505-7-50
200413548-3-97

## மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கையேடு

120 வீட்டு மின்சாதனங்கள்
மின் உதவிச்சாதனங்கள்
மின்வீரய குறிப்புகள்
மின் அருஞ்சொற்கள்
வீட்டு மின்னியல்
மின்தாக்க முதலுதவி
பாவனையாளருக்குரிய
மின் அலகுகள்/குறியீடுகள்

230/=

இலங்கையில் முதல முதலாக ஓர் புதிய பரிமாணத்தில் மார்க்கோணி நிறுவனத்தால் அனைவர் வீட்டிலும் இருக்கவேண்டிய மின்சாதனக் கையேடு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. முழுவிபரத்தினை ஞாயிறு உதயனில் எதிர்பாருங்கள். இதனைத் தபால்மூலம் பெறுவதற்கு 230 ரூபாவினை மணிஓடர் செய்து பற்றுச்சீட்டை பதிவுத்தபாலில் அனுப்பவும். இந்நூல் பதிவுப்பார்சல் மூலம் பாதுகாப்பாக அனுப்பப்படும்.
பணம் கொடுபடவேண்டிய இடம் :- Wellawatta Post Office.
பெறுபவரின் பெயர் :- Manager, Marconi Technical Institute.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112361362

## மக்கள் வங்கி

### 44ஆவது ஆண்டுவிழா அழைப்பு

விடயம்: 44ஆவது நிறைவுவிழா
வாடிக்கையாளர் உறவு தினம்
ஜெயசிறி பரிசளிப்புவிழா
காலம்: 01.07.2005 வெள்ளிக்கிழமை
5.00 (மாலை)
இடம்: யா/மக்கள் வங்கி பிராந்தியத் தலைமை அலுவலக மகாநாட்டு மண்டபம் கன்னாதிட்டி

பிரதம விருந்தினர்
திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

கௌரவ விருந்தினர்
திரு.மு.க.சிவபாதவிருதயர்
உதவிப் பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி, வட வலயம்

சிறப்பு விருந்தினர்கள்
திரு.T.K.ஆனந்தராசா
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, யாழ்.பிராந்தியம்
திரு.து.ரகு
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, யாழ்.பிராந்தியம்

*மேற்படி விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மக்கள் வங்கி, கன்னாதிட்டி,
முகாமையாளரும், ஊழியர்களும்.

(C-43792) (11-15-42)

### மரண அறிவித்தல் - திருத்தம்

கடந்த ஜூன் 27ஆம் திகதி உதயனில் - 11 ஆம் பக்கத்தில் வெளியாகிய - திருமதி கலைவாணி பாலேந்திரராஜா என்பவரது மரண அறிவித்தல் விளம்பரத்தில் - காலஞ்சென்றவரான கலைவாணியின் மாமனாரது பெயர் செல்லத்துரை (முன்னாள் மின் அத்தியட்சகர், யாழ்.மாநகர சபை) என்று இருக்க வேண்டும். அவரது பெயர் தவறுதலாக பொன்னுத்துரை என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்காக வருந்துகின்றோம். (ஆ-ர்)

## சமய சந்நிதிகளில்

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மகாசங்காபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

1008 சங்காபிசேகம் நடைபெற்று, தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். மாலை அம்பாள் வீதியுலா வருவார். (ஒ-28-203)

★ ★ ★

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலய பரணித் திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

சகல மூல மூர்த்திகளுக்கும் பரணி நட்சத்திர விசேட அபிசேகம் நடைபெற்று, தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை இடம்பெறும். இதனைத் தொடர்ந்து வைரவப் பெருமான் திருவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-119-203)

★ ★ ★

தொல்புரம்,ஜூலை1

நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம நிலவவேண்டி கொழும்புத்துறை சட்டம் பித்தறை முருகன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. இதில் மாலை 6 மணிக்கு சமய, சமூக சேவையாளர் சி.சி. வரதராசா தலைமையில் விசேட பஜனை, கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். (ஒ-119)

### ஏழாலை மத்தியில் வாக்காளர் பதி

வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் ஏழாலை மத்தி (J/206) கிராம சேவை அலுவலர் பிரிவில் 2005 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18 வயதுக்கு மேற்பட்டவர்களும் இதுவரை காலமும் வாக்காளராகத் தம்மைப் பதிவுசெய்து கொள்ளாதவர்களும கிராம அலுவலரிடம் படிவங்களைப் பெற்று இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர் சி.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஒ-15)

## சேவை நிறைவில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் நானிலம் மதிக்க கடின உழைப்பு, மானிடம் சேவை மனப்பாங்கு, செயலில் தற்றுணிவு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு உப அதிபராக சேவையாற்றி இன்று 01.07.2005 இல் அகவை அறுபதில் ஓய்வு பெறும்
திருமதி
**பூமாதேவி சிவசுப்பிரமணியம்**
ஆசிரியர் அவர்களை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெல்லியடி
மெ.மி.த.க.பாடசாலை,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(C-43781) (11-15-42)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

### தையலாளர் தேவை

எமது தையல் நிலையத்திற்கு பயிற்றப்பட்ட தையலாளர்களை அமர்த்த இருப்பதால் விரும்பியோர் தங்கள் விண்ணப்பங்களை 08.07.2005 இற்குமுன்னர் சங்க முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சம்பள விவரம் நேரில் பேசி முடிவெடுக்கப்படும்.

(C-43787) (11-15-42) பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு.

## YOGI'S

### ACADEMY OF BEAUTY CULTURE HAIR DRESSING, and HOME SCIENCE

03.07.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Cake Exhibition தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளதால் பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆசிரியை
75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(47171) (11-15-42)



உ
சிவமயம்
சித்தன்கேணி
**அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்மன் ஆலய வருடாந்த ஆனி மாத உற்சவம்**

நாககன்னி அம்பாள் அடியார்களே!

ஆனி மாத தீ மிதிப்பும் தீர்த்தோற்சவமும் இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை 8.30 மணியளவில் விசேட கும்பபூசையுடன் அபிஷேக ஆராதனையும் வசந்தமண்டபப் பூசையோடு நாக கன்னியம்பாள் திருவீதி எழுந்து ஒரு மணியளவில் தீ மிதிப்பு நடைபெறும் அனைத்து அடியார்களும் இவ்விழாவில் கலந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்வீர்களாக.

*கீரிமலை வீதி,*
*சித்தன்கேணி.* (37170) (11-15-42)

அடியார்களிற்கு தெரிவிப்பவர்
ஞானகுரு இந்திரன் ஐயா
(நாக கன்னியம்பாள் ஆலயம்)

## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03 இல் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத் தேர்வு எதிர்வரும் 03.07.2005 ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

மனித வள மேலாளர்,
மனிதவளப் பகுதி,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.
(சி-43730)(42-15-11)

## Technical College-APSS International இணைந்து நடாத்தும் City & Guilds London, U.K. பொறியியல் பயிற்சி நெறிகள்

* Telecommunication Systems Engineering
* Electrical and Electronic Engineering
* Construction Industry (including Qs)

Student of APSS International



Kanagasabai Aincaran
WORLD GOLD MEDALIST
Telecom. & Electronics Eng.
இவர் யாழ் St. Jhon's கல்லூரி மாணவன்.

A/L விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு Diploma பயிற்சிநெறிகள்

NDT/NCT/Diploma இறுதியாண்டு மாணவர்களுக்கு Ad. Diploma பயிற்சிநெறிகள்

செய்முறைப்பயிற்சிகள் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

ஆரம்பம்: 04-06-05

மேலதிக விபரங்களுக்கு
Principal, Technical College, Brown Road, Jaffna. T.P: 021-2222358
Jaffna Technical Institute, 07 Palaly Road, Jaffna. T.P: 021-2223335
APSS Int., 57 E.S Fernando Mw, Colombo-6. T.P: 011-2506803

# ஆழிப்பேரலை பாதித்தோருக்கு 1210 தற்காலிகக் குடியிருப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்.குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதற கட்டமாக ஆயிரத்து 210 தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்தத் தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொண்டைமானாறு, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி, வியாபாரிமூலை, எரிஞ்சம்மன் கோவிலடி, சுப்பர்மடம், கொட்டடி, முனை, தும்பளை கிழக்கு, கற்கோவளம், நாகர்கோவில், மணற்காடு, பருத்தித்துறை கிழக்கு ஆகிய இடங்களில் இந்தத் தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாகத் தீமானிக்கப்பட்ட ஆயிரத்து 345 குடியிருப்புகளில் ஆயிரத்து 210 குடியிருப்புகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. ஏனையவற்றின் வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இதில் கியூடெக் நிறுவனம் 475 குடியிருப்புகளையும், சேவா லங்கா நிறுவனம் 106 குடியிருப்புகளையும் அகதிகளுக்கான ஐநா.நிறுவனம் 459 குடியிருப்புகளையும், எஸ்.சி.எவ். நிறுவனம் 170 குடியிருப்புகளையும் அமைத்துக் கொடுத்துள்ளன.

இதேவேளை - இரண்டாம் கட்டமாக 525 தற்காலிகக் குடியிருப்புகளை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

முதற்கட்டமாக அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகளில் நலன்புரி நிலையங்களில் வசித்தவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் கட்டமாக அமைக்கப்படவுள்ள குடியிருப்புகளில் ஆழிப் பேரலையால் வீடுகளை இழந்து உறவினர், நண்பர்கள், வீடுகளில் வசித்து வருபவர்கள் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8)

## வலி.கல்வி வலயப் போட்டிகள்

வலி.தெற்கு,ஜூலை,1

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்வி பொதுஅறிவுப் போட்டிகள் ஜூலை மாதம் 16ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு ஒவ்வொரு கோட்டத்துக்குமாகத் தனித்தனியே நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டங்களில் நடைபெறும் இப்போட்டி தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான பாடசாலை மாணவர்களிடையே நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்டப் போட்டிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் போட்டிகள் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் சங்கானைக் கல்விக் கோட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (ஓ-152)

# போக்குவரத்துத் திணைக்களத்தினர் நடமாடும் சேவை நடத்த வேண்டும்!

## நயினாதீவுச் சாரதிகள் கோரிக்கை

போக்குவரத்துத் திணைக்களத்தினர் நயினாதீவில் நடமாடும் சேவையை நடத்தவேண்டும். - இவ்வாறு நயினாதீவிலுள்ள வாகன உரிமையாளர்களும், சாரதிகளும் வேண்டுகோள் விடுததுள்ளனர்.

நயினாதீவில் சுமார் 15 ஓட்டோக்கள் உள்ளன. சுமார் 50 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன. இதேவேளை, வாகனம் செலுத்தும் பலரிடம் வாகனப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை இல்லை என்று கூறப்படுகிறது.

இங்குள்ளவர்கள் திருத்த வேலைகளுக்காக வாகனங்களை யாழ்.நகரப்பகுதிக்கு எடுத்துச் செல்ல நேரிடுவதாகவும் -

அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆவணங்கள் இல்லாததால் சிக்கலை எதிர்நோக்குவதாகவும்- வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நெடுந்தீவில் நடத்தியதைப் போன்று போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் நயினாதீவிலும் நடமாடும் சேவையொன்றை நடத்தி உதவவேண்டும் - என்றும் அவர்கள் கோருகின்றனர். (ஓ-111)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**



தீவகச் சிறுவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய சிறுவர் குரல் சஞ்சிகையின் வெளியீடு சமீபத்தில் வேலணைத்துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்புப் பிரதியை புவியியல்துறைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு 'துறையூர் சிறகுகள்' சிறுவர் கழகத்தலைவர் உதயராஜ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# வனவளத் திணைக்களத்தின் கட்டடத் திருத்தம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்.மாவட்ட வனவளத்திணைக்களக் கட்டடத்தின் திருத்தப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. சுமார் 20 வருடங்களாகப் பராமரிப்புப் பணி இடம்பெறாதிருந்த இக்கட்டடம் யுத்த அனர்த்தத்தில் பரவலாக சேதமடைந்திருந்தது

இக்கட்டடத்தின் திருத்தவேலைகளை ஆரம்பிக்க அண்மையில் அனுமதி கிடைத்திருந்தது.

சேதமடைந்த கூரைத்தகடுகள் அகற்றப்பட்டு திருத்தப்பணிக்கான மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் -

இதற்கான நிதிஒதுக்கீட்டை செய்வதற்காக அனுராதபுரத்தில் உள்ள தலைமையலுவலகத்தில் இருந்து அதிகாரிகள் வரவுள்ளனர் என்றும் -

மேற்படி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேசமயம் வனவளத் திணைக்களத்துக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கரையோரப் பகுதிகளில் மர நடுகைத் திட்டத்தை மேற்கொள்வதற்கென மூன்று லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மரக்கன்றுகளை நடும் பகுதிகளை இங்குவரவிருக்கும் அதிகாரிகள் பார்வையிடவுமுள்ளனர். (ஓ-88)

# வடமராட்சிப் பகுதியில் சுகாதார நடவடிக்கை

வடமராட்சி,ஜூலை1

வடமராட்சிப் பகுதியில் உள்ள தேநீர்க் கடைகள், உணவகங்கள் மற்றும் பேக்கரிகளில் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளைப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு ஆகிய இடங்களில் திடீர்ப்பரிசோதனைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் உணவுப் பண்டங்களை அழிப்பதுடன் சுகாதாரத்திற்கு முரணான வகையில் இயங்கும் உணவகங்களை மூட உத்தரவிட்டுச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தியபின் திறக்க அனுமதித்தும் வருகின்றனர். (ஓ-173)

# துரித காணிச்செயலணியிடம் 4 ஆயிரத்து 635 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

துரித காணிச் செயலணியினரால் பிரதேச செயலக ரீதியாக இனங்காணப்பட்ட 4 ஆயிரத்து 635 பிரச்சினைகளுள் 712 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட துரித காணிச் செயலணி ஆணையாளர் கு.ஞானேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

துரிதகாணிச் செயலணியினர், பிரதேச செயலர் ரீதியாக காணி தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 979, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 850, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 188, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 37, கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 175, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 178, உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 115, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 644, காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 408, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 118, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 486, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 82, நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 86, வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 271, கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 979 ஆகிய எண்ணிக்கைகளில் காணிப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

இதுவரை 8 பிரதேச செயலர் பிரிவுகளில் 712 பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. 334 பிரச்சினைகள் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார் அவர். (ஓ-204-203)

# யாழ்.சிறையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துமாறு கோரிக்கை

## மனிதஉரிமை ஆணைக்குழு விடுத்தது

யாழ்ப்பாணம்,ஜலை1

யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ரோகித பிரியதர்சன சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் சமீபத்தில் யாழ். சிறைச்சாலைக்கு நேரில்சென்று பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து சிறைக்கூடங்களுக்கு மின்சாரவசதி செய்து கொடுக்குமாறும்-

மலசலகூடம், கிணறுகள் போன்றவற்றில் சுகாதாரம் பேணுமாறும் - மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-7)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பயனற்ற பற்சிகிச்சைக் கருவி

தென்மராட்சி,ஜூலை1

சாவகச்சேரி மருத்துவமனையின் பற்சிகிச்சைப் பிரிவில் பற்சிகிச்சைக் கருவிகள் பொருத்தப்படாததால் பொதுமக்கள் பயனடைய முடியாதுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவுக்கு இரு மாதங்களுக்கு முன்னர் பற்கள் துப்புரவு செய்யும் கருவி வழங்கப்பட்டது.

இக் கருவி இன்றுவரை பொருத்தப்படவில்லை. இதனால், பொதுமக்கள் பயனடைய முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி மருத்துவமனையை யாழ்.அரச அதிபரும் நிக்கொட் நிறுவன பிராந்திய முகாமையாளரும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பார்வையிடவுள்ளனர்.

யுத்தத்தின் போதுசேதமடைந்த இந்த மருத்துவமனைக் கட்டடங்களின் ஒருபகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளதால் அப்பகுதியில் புதிய கட்டடங்கள் அமைப்பது தொடர்பாக இவர்கள் அப்போது ஆலோசிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)



நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த ஈச்சமோட்டைக்குளம் தற்போது ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகிறது. புனரமைப்புப் பணியில் புல்டோசர் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:அரியாலைச் செய்தியாளர்)

# தேங்காய் வீழ்ந்து மூவர் காயம்!

தென்மராட்சி,ஜூலை1

தென்னை மரத்திலிருந்து தேங்காய் வீழ்ந்து நபர்கள் காயமடையும் சம்பவங்கள் தென்மராட்சியில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரத்தில் மட்டும் மூன்று பேர் தேங்காய் வீழ்ந்து காயமடைந்துள்ளனர்.

சரசாலையைச் சேர்ந்த மாணவியான இ. சிவதர்மினி (வயது 14) என்பவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, தேங்காய் கையில் வீழ்ந்து காயமடைந்தர்ர்.

மிருசுவில் வடக்கு, குருக்கள் மாவடியைச் சேர்ந்த சுப்பையா விசாலாட்சி (வயது 70) என்பவரும் -

அல்லாரை தெற்கைச் சேர்ந்த சிவானந்தம் கமலாதேவி (வயது 40) என்பவரும் -

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தேங்காய் வீழ்ந்து காயமடைந்தனர். (ஓ-117)

# நெஞ்சகலாத நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19 – 01 – 1943

மறைவு
01 – 06 – 2005

திருமதி

# ஏகாம்பரம் அன்னப்பிள்ளை (மணி)

அன்புடனும் பண்புடனும் அகிலத்தில் வாழ்ந்து
ஆதரவாய் அரவணைத்து அன்புமொழி பேசி
இன்ப வாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துவிட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வேண்டி நிற்கின்றோம்.

நேற்று (30-06-2005) வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் இன்று (01-07-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளுக்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன், நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையிலிருந்து படகுப் பயணத்தின்போது திடீரென இறையடி சேர்ந்த எமது அன்பு அன்னையின் மறைவின்போது எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் செய்த அன்புள்ளங்கொண்டவர்களுக்கும் தபால், தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் அம்புலன்ஸ் மூலம் உதவிய யாழ்.போதனா வைத்தியசாலை அன்பு நெஞ்சங்களுக்கும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

☞ *எமது அழைப்புக் கிடைக்காத அன்பர்கள் இந்த அழைப்பையே தங்களுக்கான அழைப்பாக ஏற்று வருகைதந்து ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.*



அமரர்
நாகப்பர் நாகநாதர்



திருமதி
நாகநாதர் நாகம்மா



திருமதி
தனுக்கொடி தையல்நாயகி

"லிங்கம் களஞ்சியம்",
இல.246, வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(37147)(26-14-19)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த வலியுறுத்தி ஐ.தே.க.பாதயாத்திரை நாளை ஆரம்பம்

## லட்சம் பேர் திரள்வர் என்கிறார் அத்தநாயக்க

கொழும்பு,ஜுலை1

உரியநேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படியும் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படியும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்துள்ள மக்கள் எழுச்சிப் பேரணியும் பாதயாத்திரையும் நாளை மாத்தறையில் இருந்து ஆரம்பமாகவுள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நிவாரண உதவிகள் கிடைக்காது ஏமாற்றமடைந்த ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆதரவாளர்கள் உட்படப் பல லட்சம் பேர் இதில் கலந்துகொள்வார்கள் என ஐதேக. பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

நாளை ஆரம்பமாகும் மக்கள் எழுச்சிப் பேரணி வெற்றிபெறவேண்டும் எனத் தெய்வ ஆசிவேண்டி சர்வமத வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ளன.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தப் பாதயாத்திரை நாளை காலை எட்டு மணிக்கு தெவுந்தர விஷ்ணு தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

இப்பாதயாத்திரை மிரிஸ்ஸ, கொக்கல, காலி, ஹிக்கடுவ, பலப்பிட்டிய, இந்துருவ, பேருவளை, களுத்துறை, பாணந்துறை, தெஹிவளை ஆகிய நகரங்களுக்கு ஊடாக 12ஆம் திகதி கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை வந்தடையும்.

தொடர்ச்சியாக 12 நாள்கள் நடைபெறும் இப்பாதயாத்திரையில் மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், பொதுஅமைப்புகளைச் சேர்ந்தோர், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மகளிர் அணியினர் பிரதேசசபை, மாகாண சபை உறுப்பினர்கள் என சுமார் லட்சக்கணக்கானோர் கலந்துகொள்வர் என ஐ.தே.க. எதிர்பார்க்கிறது. சுமார் 10 லட்சம் பேர் லிப்டன் சுற்றுவட்டாரத்தில் கூடுவர் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ-க)

## வீரச்சாவு பற்றி அறிவிப்பு

அம்பாறை மாவட்டம் அட்டைப்பள்ளம் பகுதியில் 29.06.2005 அன்று தேசத்துரோகிகள் மேற்கொண்ட தாக்குதலில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விவேகானந்தபுரம், வெல்லாவெளி, மட்டக்களப்பைச் சேர்ந்த கன்னமுத்து அரசகுமார் (வவி) என்பவரே இவ்வாறு வீரச்சாவடைந்தவராவார்.

இதேவேளை, 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளரான கள்ளப்பாடு, முல்லைத்தீவைச் சொந்த முகவரியாகவும் 5ஆம் வட்டாரம் - கோம்பாவில், புதுக்குடியிருப்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசமாணிக்கம் தங்கலட்சுமி என்பவர் சாவடைந்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டி: ஜே.வி.பி. இன்னும் முடிவில்லை

## பிரதமரின் பதிலுக்கு காத்திருக்கிறதாம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனி வேட்பாளர் ஒருவரை நியமிப்பது குறித்து இதுவரை நாம் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. பொதுக்கட்டமைப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் தெரிவிக்குமாறு நாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக் கோரியிருக்கிறோம். பிரதமரின் அந்த அறிவிப்பே, ஜனாதிபதித் தேர்தலில் நாம தனித்துப் போட்டியிடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

- இவ்வாறு நேற்று உதயனுக்குத் தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டை விளக்கிக் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை ஜே.வி.பி. உயர்பீடம் கூடி ஆராயவில்லை. அதுபோல் இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது பொதுவேட்பாளரொருவரை ஆதரிப்பதா என்பது பற்றியும் நாம் சிந்திக்கவில்லை. ஆனாலும், உரிய வேளை, வரும்போது ஜே.வி.பி. உரிய தீர்மானங்களை எடுக்கும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளரானால் அவரைப் பொதுவேட்பாளராக நிறுத்துவது பற்றி பின்னர் ஆராயலாம். அதைப் பற்றி இப்போது கருத்துக்கூறிவிடமுடியாது. பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்தான தனதுநிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் கூறுமாறு பிரதமரைக் கோரியிருக்கிறோம். அதைப் பொறுத்தே தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்போம். இவ்வாறு விஜித்த ஹேரத் மேலும் கூறினார். (எ-க)

# தொங்கு நாடாளுமன்றில் ஜீவனற்ற அரசா? சாத்தியமே இல்லை என்கிறது ஐ.தே.கட்சி!

## உறுதியான அரசமைப்பதே இலட்சியம் என கருஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை1

தொங்கு நாடாளுமன்றம் ஒன்றில் ஜீவனற்ற ஓர் அரசை அமைக்கும் நப்பாசை ஐ.தே.கவுக்கு இல்லை. நாட்டு மக்களின் நலன் கருதித் தீர்மானங்களை எடுக்கவும் எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் கூடிய உறுதியான அரசு ஒன்றை அமைப்பதே எமது லட்சியம். இதனை ஜனாதிபதிக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் வகையிலேயே பாரிய மக்கள் எழுச்சிப் போராட்டத்தையும் பாதயாத்திரையையும் நடத்தவுள்ளோம் எனக் கூறுகின்றார் ஐ.தே.க. பிரதித்தலைவரான கருஜயசூரிய எம்.பி.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாளை முதல் நடத்தவுள்ள அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பாதயாத்திரை என்பன தொடர்பாக கருஜயசூரிய ஊடகங்களுக்கு விளக்கம் அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசு, மூன்று வாரங்களில் ஒரு மாதத்தில், மூன்றே மாதங்களில், ஆறு மாதங்களில் சாதித்துவிடுவோம் என்றெல்லாம் பல கட்டங்களில் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டது.

அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். கடந்த 14 மாதகால அம்மையாரின் அரசில் வாழ்க்கைச் செலவுகள் 'ரொக்கட்' வேகத்தில் அதிகரித்துக்கொண்டே போயின; போகின்றன.

இதுதொடர்ந்தால் மீண்டும் ஒரு பட்டினியுகம் இந்த நாட்டில் ஏற்பட்டுவிடும். நாட்டில் கொந்தளிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கட்டில் இருந்து இறங்குவதற்காக மட்டுமே ஜனாதிபதி ஜே.வி.பி.யினருடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை உருவாக்கினார் என்பது இப்பொழுது உறுதியாகிவிட்டது.

அதேவேளை, ஜனாதிபதியுடன் கூட்டுச் சேர்ந்தது தவறு என்பதை 14 மாதங்களின் பின்னர்தான் ஜே.வி.பியினரும் உணர்ந்துள்ளனர்.

ஜே.வி.பியும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டபோது சர்வதேச மட்டத்தில் அதியுயர் ஒப்பந்தம் இது என்றும் - எழுத்துக்கு எழுத்து பல்துறை நிபுணர்களால் அலசி ஆராயப்பட்டு உருவாக்கப்பட்டது என்றும் - இந்த ஒப்பந்தத்தை எவராலுமே உடைக்க முடியாது என்றும் ஜனாதிபதி சந்திரிகாவை 'விகாரமாதேவி' யாக ஏற்றுக்கொள்வோம் எனவும் விமல் வீரவன்ஸ வாழ்த்தினார்.

அதே விமல் வீரவன்ஸ ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி என்றும் - பதவி வெறி பிடித்தவர் என்றும் ஸ்ரீலசுகட்சியை அழித்துவிடுவார் என்றும் இப்போது வாய் ஓயாமல் சாடுகிறார். (எ-க)

## அரசசேவை கீழுழைப்பு பட்டதாரிகளுக்கு அழைப்பு

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கான முக்கிய சந்திப்பு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என்றும் -

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் அரசின் திட்டம் குறித்து இந்தச் சந்திப்பில் விளக்கிக் கூறப்படும் என்றும் அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராஜா அறிவித்துள்ளார். (எ)


**நெல்லை சில்க் அதிர்ஷ்டம்**

இந்த மாதத்திற்கான பட்டுச்சேலை அதிர்ஷ்டலாப இல.1562 நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

S.அகிலதாஸ்
உரிமையாளர்.
(சி-43799)(12-16-29)

**SPOKEN ENGLISH**
WITH GRAMMAR
Lectured by:-
Mr. NISHANTHAN
(Dip. in. English)
மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் இலகுவாக எழுத, பேச, வாசிக்க
சனி - ஞாயிறு புதிய பிரிவுகள்
மூன்று இடத்தில்
ஆரம்பம்:- 02-07-2005 (ப.நே)
01. பொருளியற்கல்லூரி - யாழ்.நகரில் - 8p.m.
02. பொருளியற்கல்லூரி -இணுவில் - 2p.m.
03. BARATHY - சித்தன்கேணி - 4.15p.m.
நீங்கள் விரும்பிய இடத்தில் உங்கள் அனுமதியினை பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு: உங்கள் பயிற்சிக்காக மேலதிகமாக பேச்சுப்பயிற்சிகள் இலவசமாக கணனி மூலம் கற்கைகள் மேற்கொள்ளப்படும்.
▼ ஏற்கனவே நடக்கின்ற பிரிவு I, பிரிவுII, பிரிவு III இப்பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது. (37149)(29-16-12)

இலங்கை மெதடிஸ்த திருஅவை பருத்தித்துறை - கட்டைவேலி சேகரம்
**மலிவு விற்பனை**
இடம்: மெதடிஸ்த தேவாலயம், கட்டைவேலி.
காலம்: 02.07.2005 (சனி) மு.ப. 9.00- பி.ப. 5.00 மணிவரை
உணவு வகைகள், புடைவைகள், பழவகைகள், மரக்கறிவகைகள், அழகு சாதன பொருள்கள் உட்பட நானாவித பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு: 22.01.2005 இல் நடைபெறவிருந்த இவ்விற்பனை இக்குறித்த தினத்தில் நடைபெறும்.
தகவல்:
சேகர முகாமைக்குழு, கட்டைவேலி.
(37182)(12-16-29)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி (சினிமா)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/41381)(12-17)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விக்ராந், லக்ஷ்மிராய், வடிவேலு நடித்த
கற்க கசடற (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 6.00 (பு.நே).
2ஆம் திகதி முதல்
DAY AFTER TOMORROW (நாளைமறுநாள்)
(C/41386)(29-16-17)

நாதன்ஸ் சினிமா
அஜீத், தேவயானி, மணிவண்ணன் நடித்த
காதல்கோட்டை (ரீல்ஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(சி-43363)


## மரண அறிவித்தல்

### அட்சலிங்கம் தேவராஜா

(தேவன் மாஸ்ரர் - நயினாதீவு)

(ஆசிரியரும் ஸ்ரீநாகை இன் பங்காளரும்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அட்சலிங்கம் தேவராசா நேற்று (30.06.2005) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*E 1-2, வெலுவனராம பிளார்ஸ்,*
*கொழும்பு - 6.*
*T.P.: 581514*

தகவல்:
K.K. நாதன்
(தமயன் - யாழ். பிரதம தபால் அகம்).
T.P.: 0777-110762

(37185)(12-16-29)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா நடேசு

அல்வாய் வடக்கு, கொத்தலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடேசு அவர்கள் நேற்று (30.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா - கற்பகம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற தேவராசா அவர்களின் அன்புச் சகோதரனும் தர்மவதி அவர்களின் அன்புக் கணவரும் ம.வளர்மதி, த.ஜெயமதி, நி.கலைச்செல்வி (சுவிஸ்), கு.செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.மணிவண்ணன் (லண்டன்), வே.தவம், ச.நித்தியானந்தன் (சுவிஸ்), மா.குணராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ம.புருஷோத்தமன், ம.மதிவர்மன், ம.சுகிந்தன் (யூட்), காலஞ்சென்ற மதிவதனி, த.தாருகன், த.அப்சரா, நி.நிதர்சன் (சுவிஸ்), நி.நிகிலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மதிவதனம்'*
*அல்வாய் வடக்கு.* (சி-43798)(12-16-29)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சின்னத்துரை கமலாவதி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.41A, உக்குளான்குளம், வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கமலாவதி அவர்கள் 29.06.2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் சிவவரதன் (கனடா), சிவனேஸ்வரி (கனடா), சிவசுதன், சிவசுதாஜினி (நோர்வே), சுதர்ஷினி (கனடா), சுஜாந்தினி, சிவவதனன் ஆகியோரின் அன்புத் தாயும் தெய்வேந்திரராசா (கனடா), சுகுணா, கோடீஸ்வரன் (நோர்வே), பிரதீபன் (கனடா), விஜயரட்ணம் (ராஜன் - ரத்னா ரவல்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் அர்ஜுன், பானுஜா, மனோஜன், சுகன்யா, தக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
S.S.சுதன் (கண்ணன்)
(சாரதி, பிரதேச செயலகம் - பளை).

*இல.41 A, உக்குளான்குளம்,*
*வவுனியா.*

(37177)(12-16-29)

## செம்மணி மனித எச்சங்களின் மரபணு பரிசோதனை அறிக்கை

### நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவு

செம்மணிப் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மரபணுப் பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

- இவ்வாறு புலனாய்வுப் பொலீஸாரைப் பணித்தார் கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் குசல சரோஜினி வீரவர்த்தன.

செம்மணிப் படுகொலை தொடர்பான அடுத்த விசாரணை செப்டெம்பர் 30ஆம் திகதி நடைபெறும். அப்போது மரபணுப் பரிசோதனையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார் பிரதம மஜிஸ்திரேட்.

இராணுவத்தினரால் 1996 இற்கும் 1997 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள தொடர்பில் இராணுவத்தைச் சேர்ந்த எச்.ஜே.ல்லித் புஷ்பகுமார, வை.ஜி.ஏ.உதயகுமார, பீ.ஏ.சமரவிக்ரம, வை.எஸ்.பெரேரா, எஸ்.விஜயவர்த்தன ஆகியோர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (எ-க)

## பொதுக்கட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெடுக்க இது உதவும். பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

இக்கட்டமைப்பை விரைந்து செயற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறோம். ஏப்ரல் 2003முதல் முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க இரு தரப்பினரும் முன்வரவேண்டும். இலங்கை அமைதிப்பேச்சுகளுக்கு ஆஸ்திரேலியா உறுதியான ஆதரவை அளிக்கும்.

ஸ்ரீலங்காவில் தொடரும் வன்முறை கள், படுகொலைகள் கவலையளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. இந்தப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்ப மனிதாபிமான உதவிகளையும், அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள பல்வேறு திட்டங்களுக்காக ஆஸ்திரேலிய அரசு இந்த ஆண்டு 3கோடி 98 லட்சம் டொலரை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ஒரு கோடி டொலர் ஆழிப்பேரலை நிவாரண உதவிக்கு உள்ளடக்கப்படும் - என்றார் அவர். (எ-க)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்
BITSMANS
மானிப்பாய்
ஆகிய இரு நிறுவனங்களிலும்
A/L 2007 - தமிழ்
செய்யுட் கோவையும்
இலக்கணமும
By:- N.பாலா
ஆரம்பம்: 02.07.2005
sat 1.00 p.m.
(37115)(13-16-29)

## புலிகளின் சீற்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள், புலிகளின் போராளிகள், ஆதரவாளர்கள் சுட்டுக்கொல்லப்படுதல், அச்சுறுத்தப்படுதல், புலிகளின் சுயாதீன நடமாட்டம் முடக்கப்படுதல் என்பன புலிகளின் செயற்பாட்டை கிழக்கில் அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளின் கட்டங்களே எனப் புலிகளின் தலைமை கருதுகின்றது.

கிழக்கில் புலிகளை முடக்க இராணுவ உளவுப்பிரிவு தீட்டியிருக்கும் திட்டங்களை புலிகளின் உளவுப் பிரிவு அறிந்து கொண்டிருப்பதை அடுத்து புலிகளின் தலைவர் சீற்றத்தின் உச்சியில் இருக்கிறார் என வும் இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவு காணப்பட வேண்டும் என்பதில் அவர் மிக உறுதியாக இருக்கிறார் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

"சமாதான முயற்சிகளின் பெயரில் புலிகளின் ஆதிக்கத்தை உடைக்கும் நடவடிக்கைகளை இனிமேலும் சகிக்க முடியாது, பொறுக்கமுடியாது சமாதான முயற்சிகளை சற்றுக்காலம் தள்ளி வைத்துவிட்டு இந்தப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும். இப்படியே இழுத்துச் செல்ல அனுமதிக்கவே முடியாது அரச புலனாய்வுப்பிரிவின் மறைமுகமான சமாதான விரோதப்போக்குக்கு இடமளித்து நமது இயக்கத்தையோ, போராட்டத்தையோ நாம் இழக்க முடியாது. அரசுப்படை திருந்தா விட்டால் - யுத்த நிறுத்தத்தை பயன்படுததி புலிகளின் ஆதிக்கத்தை உடைக்கும் முயற்சியைக் கைவிடாவிட்டால் - அதைத் திருத்துவதற்குத் தேவையானால் யுத்த நிறுத்தத்தை முறிப்பதுதான் வழிஎன்றால் அதையும் செய்யத் தயங்கக்கூடாது" - என்ற கட்டத்திற்குப் புலிகளின் தலைமை வந்துவிட்டதாக நம்பகரமாக அறியவந்தது.

ஒருபுறம் பொதுக்கட்டமைப்பு ஆரவாரத்தைக் காட்டிக்கொண்டு மறுபுறம் புலிகளின் செல்வாக்கை வடக்கோடு மட்டுப்படுத்த வைக்கும் திட்டத்தை அரச இராணுவப் புலனாய்வுப்பிரிவு முன்னெடுக்கலாம் என்று எதிர்பார்க்கும் புலிகளின் தலைமை என்ன விலை கொடுத்தாவது என்ன வேலை யைச் செய்தாவது அதை முறியடிப்பதற் குத் தயாராகிவிட்டது எனக்கூறப்பட்டது.

இது விடயத்தில் புலிகளின் பிடிவாதமும், உறுதியும், கடும்போக்கும் அடுத்து வரும் வாரங்களில் அப்பட்டமாக வெளிப்படும் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(எ-க-3)

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:- T.THANENDRAN
புதிய பிரிவு ஆரம்பம்: 02.07.2005
sat., sun. 5.30 p.m.
★ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
(37179)(13-16-29)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரல் சமன்குமார மற்றும் இராணுவச் சாரதியான சமிந்த குமார ஆகிய மூவருமே இந்த சம்பவத்தில் கொல் லப்பட்டவர்களாவர்.

இவர்கள் பயணித்த ஓட்டோவை மட்டு. பாலமீன்மடு வீதியில் வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் வழிமறித்த பின்னர் சரமாரியாக அவர்கள் மீது வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர்.

தாக்குதலை நடத்தியவர்கள் தாம் வைத்திருந்த ரி-56 ரக துப்பாக்கியை அந்த இடத்திலேயே கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இறந்தவர்களில் ஒருவர் இராணுவச் சீருடையில் காணப்பட்டார். ஏனைய இருவரும் சிவில்உடை தரித்திருந்தனர். ஒருவரின் சடலம் ஓட்டோவின் உள்ளேயும் இருவரின சடலம் வெளியிலும் காணப்பட்டன. சம்பவ இடத்தில் இருந்து பல துப்பாக்கி ரவைகள் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலங்க ளைப் பார்வையிட்டார்.

இந்தக் கொலைகளை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என இராணுவத் தரப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பயணித்த ஓட்டோவை பின்தொடர்ந்து வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

தாக்குதலின் பின்னர் இராணுவத்தின ரும் பொலீஸாரும் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டனர். எனினும் எவரும் கைதுசெய்யப்பட வில்லை.

இதேவேளை, இராணுவத்தினர் மீதான இந்தத் தாக்குதல்களை அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது. 'புலிகள் இயக்கத்துடன் அரசு ஒத்துழைப்புக்கான தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்துவரும் இவ் வேளையில் இவ்வாறான அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்கள் விசனத்தை ஏற்படுத்துவனவாகும்.' என்று அரச தகவல் திணைக்களம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் மரண விசாரணைகளின் பின்பு விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சாரதி தவிர்ந்த ஏனைய இருவரும் கிரனேட்டுகள் மற்றும் ரி-56 ரகத் துப் பாக்கி ஒன்று, 9 எம்.எம். ரக கைத்துப்பாககி ஆகியவற்றை வைத்திருந்துள்ளனர். இவை அனைத்தும் அந்த இடத்தில் கிடந்துள்ளன.

(எ-க-ரி)

## ஜனாதிபதி வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சா் அநுரா பண்டாரநாயக்காவிற்கு நெருக்கமான கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டு கடுமையான அதிருப்தியை வெளியிட்டதுடன் இது விடயத்தை கட்சி மேலிடத்தின் கவனத்திற்குத் தாங்கள் கொண்டுவரப்போகிறார்கள் எனவும் எச்சரித்தனர் எனக்கூறப்படுகின்றது.

அதேசமயம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நெருங்கிய தொடர்புள்ள சிரேஷட அமைச்சர்கள் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவர உத்தேசித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. யார் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்ற சர்ச்சையால் கட்சியின் மாவட்டமட்டக் கிளைகளிலும் முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-க)

## பொதுக்கட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச் சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹைஜியர் ஹஜ்ஜூம், சட்டமாஅதிபர் சார்பில் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் பதவிகளை வகிக்கும் சத்தியா ஹெட்டிஹே, பி.ஏ.ரத்நாயக்கா ஆகியோரும் ஆஜராகினர்.

"ஒப்பமிடப்பட்ட மூல ஒப்பந்தத்தை அல்லது அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பிக்காமல் அந்த ஒப்பந்தத்திற்கு எதிராக இந்த வழக்குத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அப்படி உறுதியான ஆவண அடிப்படையில்லாத இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது" - என அவர்கள் சுட்டிக்காட்டினர் எனினும் இவ்விடயம் தொடர்பாகத் தமது பொறுப்பான விவாதத்தை அதற்குரிய வேளைவரும்போது முன்வைப்போம் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

உரியமூல ஆவண ஆதாரத்தைப் பெற்று. அதனடிப்படையில் வழக்கைத் தொடர்வதற்காக மூன்று வாரகால அவகாசம் வழங்கும்படி மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணி கோரினார்.

அதற்கு அனுமதி அளித்து ஜூலை 20 ஆம் திகதிவரை மனுக்களை ஒத்திவைத்தார் நீதிபதி.

நீதிமன்றுக்கு நேற்று சமுகம்தராத மூன்று எதிர்மனுதாரர்களான - புலிகளின் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் ரஞ்சன் சண்முகலிங்கன், ஜனாதிபதியின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரையும் ஜூலை20ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் பிறப்பிக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார். (எ-க-ரி)

A/L 2007, 2006
புதிய பிரிவு II
தமிழ் - சிவ.முகுந்தன்
வரலாறு - S.சுஜிகரன்
இந்துநாகரிகம் - S.பிரதீபன்
புவியியல் - கிரிதரன்
ஆரம்பம்:- 04.07.2005
திங்கள் - 4 P.M. (O.T.)
★ அனுமதிகள் 04.07.2005 முதல் பெற்றுக்கொள்ளலாம்.
(3716-K)(13-16-29)
நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை.

PC UPGRADES
PC தரமுயர்த்தல்

உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில் நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்
■ உங்கள் கணனிகளின் பரிசிலனை இலவசம்
■ உங்கள் விட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொழில் நுட்பவியலாளர்கள் வந்து பரிசிலிற்கும் வசதி
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

கணக்கீடு
A/L 2006 பிரிவு I - கம்பனி சனி 3 p.m.
A/L 2007 பிரிவு I - கணக்கீட்டுச் சமன்பாடு சனி 4 p.m.
A/L 2006 பிரிவு II - பங்குடமை சனி 5 p.m.
A/L2007 பிரிவுII-தொங்கல் கணக்கு திங் 4.30p.m.
S.தவா B.Com.(Hons)(Acc.spl.)
NEW SCIENCE COLLEGE JAFFNA.
(37178)(13-16-29)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
DAY CLASS
CHE. - அன்பழகன் Bio. - அல்போன்ஸ்
Phy. - ஜெயசீலன் Maths. - கோணேஸ் -பிரபா
(சீ-43901)(13-16-29)
இன்று ஆரம்பம்: 9.30 a.m.

Wanted Book Binders & Trainee Book Binders
புத்தகம் கட்டுநர்களும், பயிலுநர்களும் தேவை
யாழ். மாநகர எல்லைக்குள் வாழும் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
(2005. யூலை 4 ஆம், 5 ஆம் திகதிகளில் மு.ப. 10.30 மணிமுதல் பி. ப. 4.00 மணிவரை நேரில் வரவும்.)
பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2006
Day class பிரிவு I
Tam. - M.சுரேஸ்
Geo. - S.கிருஸ்ணா
H/C -S.சுரேஸ்
Dra.- I. சத்தியா
P.S.- T. திருமுருகன்
Log. - R.ஜெனகன்
Chi. - S. ரங்கன்
சனி, ஞாயிறு மட்டும் வாரம் 5 மணித்தியாலம்
ஆரம்பம்: 02.07.2005, 8a.m.
(37182)
D.C.S.
342, ஸ்ரான்லி வீதி, நியூட்டன் ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்.

A/L 06, 07
வணிகக்கல்வி திரு.யசோ
கணக்கீடு திரு.சயந்தன்
ஆரம்பம்: 01-07-2005
வெள்ளி 4.p.m. (N.T.)
யூனிவேசல்
(37064)

## மரண அறிவித்தல்கள்

### சந்தன் இளையதம்பி

உடுப்பிட்டி, இமையாணனைப் பிறப்பிடமாகவும் இல.100, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தன் இளையதம்பி அவர்கள் நேற்று (30.06.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் கந்தசாமியின் (ஆசிரியர் யா/கனகரத்தினம் ம.ம.வி.) தந்தையும் நந்தினியின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2005) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*இல.100, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37189)(13-16-29)

தகவல்:
இ.கந்தசாமி (மகன்).

### திருமதி ஜெயசீலன் யசோதினி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசீலன் யசோதினி அவர்கள் நேற்று (30.06.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயசீலனின் அன்பு மனைவியும் டிலக்சனா, கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில்.* (37190)(13-16-29)

தகவல்:
கணவன்

EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் ப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.